REGD M 4642.

# திராவிடநாடு

ா விபரம்
—
ண்டு ரூ 7,
3 8 0

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 16—10—49 | இதழ் 16

# வேஷம் போடுகிறார்கள்!

—❀—

"எங்கு பார்த்தாலும் காந்தி பக்தர்கள் பல ரூபங்களில் கிளம்பி விட்டார்கள். கள்ளமார்க்கட்காரர்கள், கொள்ளை அடிப்போர் யாவரும் கதரை அணிந்து வேஷம் போடுகிறார்கள்."

மந்திரி மாதவமேனன்
(7—10—49)

# உரிமை பெற

கடந்த 5-ந் தேதியன்று நடைபெற்ற திருவாங்கூர்—கொச்சி யூனியன் சட்டசபைக் கூட்டத்தில் கேரள யூனியனுக்கும் — இந்திய யூனியனுக்கும் உள்ள தொடர்புகள், சட்டதிட்டங்கள் சம்பந்தமாகச் சில அம்சங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன.

திருவாங்கூர்வாழ் தமிழர்கள் தங்கட்குச் சுயநிர்ணய உரிமை ஏற்படும் வகையில், இந்த ஷரத்திற்குச் சில திருத்தங்கள் கொண்டு வரமுடிவு செய்து, அதற்கு அனுமதி தருமாறு திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் சட்டசபைக்கட்சி கோரியது.

ஆனால் கேரளயூனியன் சட்டசபையில் தமிழர்களின் பிரதிநிதிகள் சிறுபான்மையினராதலாலும், தமிழ் பேசும் பிராந்தியங்கள் யூனியனிலிருந்து பிரிந்து இந்திய யூனியனில் சேரக்கூடாது என ஆட்சேபிப்பவர் பெரும்பான்மையானதாலும், இந்தக் கோரிக்கை ஏற்கப்படவில்லை. திருவாங்கூர் முன்னாள் பிரதமர் பட்டம் தாணுப்பிள்ளை போன்றார் தமிழர்களின் கோரிக்கை மீது வலியுறுத்திப் பேசியும் பெரும்பான்மையான அவர்கள், தமிழர்கள் கோரிக்கையை ஏற்கவில்லை.

சர்தார் பட்டேலைக்கண்டு, திருவாங்கூர் வாழ் தமிழர்கள் சமஸ்தான சர்க்காரால் படும் அவதியையும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஜில்லாக்களுடன்—இந்திய யூனியனில்—சேர விரும்பும் அவர்கள் கோரிக்கை ஆகியவைகள் பற்றியும் திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரும், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தோழர் காமராஜரும், டெல்லியில் பேட்டிகண்டு பேசியபொழுது, காலம்வரும்போது கவனிக்கத்தயார் என்பதாக அவர் உறுதிமொழி தந்தார்.

இதையொட்டியே நேரடி நடவடிக்கைக் கிளர்ச்சியிலீடுபட்ட திருவாங்கூர் தமிழர்கள் அதை நிறுத்தி வைத்தார்கள்.

பின்னரே கொச்சி—திருவாங்கூர் இணைப்பு ஏற்பட்டு, இரண்டு சமஸ்தானங்களும் ஒரு யூனியன் ஆகி, இரண்டு சட்டசபைகள் ஒன்றாக ஆக்கப்பட்டு, மந்திரிசபையும் அமைக்கப்பட்டு நிர்வாகம் நடந்துவருகிறது.

இந்நிலையில், 5-ந்தேதி சட்டசபைக் கூட்டத்தில் தமிழர்கள் கோரிக்கை, வழக்கம்போல, திருவாங்கூர் சட்டசபையினரால் மறுக்கப்பட்டு விட்டது.

தமிழர்கள் கோரிக்கை அர்த்தமற்றதல்ல, நியாயம் நிரம்பியது, பெரும்பான்மையாகத் தமிழர்கள் வாழுமிடங்களை, இந்திய யூனியனில் சேர்த்துவிடவேண்டும் — இனிமேற்பட்டும் சமஸ்தான யூனியனுக்குக் கட்டுப்பட்டு இருக்கமுடியாது என்பதுதான்.

ஆனால் சமஸ்தான சர்க்காரும், அதிகாரிகளுமோ தமிழர்கள்கோரிக்கையை மறுத்து, அவர்கள் கிளர்ச்சியை அடக்கவே முனைந்து நிற்கிறார்கள். தமிழர்கள் வாழும் நாஞ்சில் நாட்டுப்பகுதி வளமை நிரம்பியதாலும், நெல் சாகுபடி அதிகமாயிருப்பதாலும் அதை இழக்க சமஸ்தானாதிபதிகள் விரும்பவில்லை. எனவே, தமிழர்கள் கோரிக்கைக் கிளர்ச்சியை அடக்குவதில் முனைந்து நிற்கின்றனர்.

இந் நிலையில் இனியும் திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள், திருவாங்கூர் சட்ட சபையில் இருப்பதால் பயனில்லை. தங்கள் இடங்களை ராஜினாமா செய்து விட்டு, உரிமைக் கிளர்ச்சியில் இறங்கினாலே வெற்றி கிடைக்கும்.

நியாயம் நிரம்பிய அவர்கள் கோரிக்கைக்குத் தமிழ்நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் ஆதரவு அளிக்கத் தயங்காது.

✻

## கலைமகள் கடாட்சம்!

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வளவு பேர் படித்து வேலையின்றிக் கிடக்கும்போது நமக்கேன் படிப்பு என்ற எண்ணம் மாணவர் மனதிலும், அத்தனைபேர் வீட்டுப் பிள்ளைகளும் படித்துப்பட்டம் பெற்றும், கிராப்புத்தலையும், காலர் ஷர்ட்டும், காலி ஜேபியுமாக இருக்கும் போது நம் வீட்டுப் பிள்ளைக்கு உயர்தரப் படிப்பு எதற்கு என்ற எண்ணம் பெற்றோர்களுக்கும், உயர்தரப் படிப்பு வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தானே வளர்க்கிற அதற்காக ஏன் பணம் செலவிட தொல்லையை வளர்ப்பது என யோசனை சர்க்காருக்கும் தோன் வது கண்டுதான் நாம் வரு கிறோம்.

படிப்பில்லாமை தாண்டவமி நாட்டிலே இந்த மனோபாவம் ப விட்டால், அது முன்னேற் தையே தடைப்படுத்தும்

மற்றைய நாடுகளையும் நம்நா டையும் ஒப்பிட்டுப் பார்ப்பி நம் நாட்டிலேயே படித்தோ தொகையைப் படிக்காதோர்தொ யுடன் ஒப்பிட்டுப் பார்த்தா உயர் தரப்படிப்புப்போதும்—வே டாம் என்று கூறும் நிலையில் நம நாடு இல்லை என்பது நன் விளங்கும்.

ஆனால் செய்யவேண்டியதுஎன்ன உயர்தரப் படிப்பின் போக்கு செலவும் மாற்றப்படவேண்டு ஆரம்பக் கல்விக்கு அதிகம தொகை செலவிடப்படவேண்டு படித்தோரின் கஷ்டத்தைப்போக் சர்க்கார் பொறுப்பேற்று ஆவ செய்தே தீரவேண்டும். இல்லையே யாராலும் தீர்க்க முடியாத கொ நோயாக, வேலையில்லாக் கொடு மாறி வளரும். அது மிக ஆப தையே விளைவிக்கும்!

✻

## சந்தாதாரர்களுக்கு

“திராவிட நாடு” சந்தாதார சந்தா சம்பந்தமாகக் கடிதம் எ தும்போது சந்தா எண்ணைக் கு தெழுத வேண்டும். சந்தா எ குறிப்பிடாத கடிதங்கள் கவனிக் படமாட்டா. சந்தா முடியும் தே ஒவ்வொரு முகவரிக்கு அடியி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை பார்த்துச் சந்தாவைப் புதுப்பி துக் கொள்ளவும்.

மானேஜர்.

## ஏஜண்டுத் தோழர்களுக்

“திராவிட நாடு” அதிகம் காப் கள் தேவைப்படுவோர், பிரதி வ மும் புதன்கிழமைக்குள் தெரிவி கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்.

# "மந்திரி என்பதை மறந்து............!"

...க்கிரமாதித்தியன் இறந்த பிறகு ...னுடைய சிங்காதனம் போஜராஜ...குக் கிடைத்ததாம். மிக பராக்...சாலியான அந்த அரசனின் ...யாசனம் தனக்குக் கிடைத்து ...ப்பற்றிக் களிப்படைந்த போஜ...னன், புனலாடி, புத்தாடை...டு, பரிமளகந்தமணிந்து கொலு...டபம் புகுந்தானும், சிங்கா...ம் ஏற! அந்தச் சிங்காதனம் 32 ...மைகள் கொண்டதாம். மிக வசீ...ான பெயர் ஒவ்வொரு பதுமைக் ... உண்டாம்.

...போஜராஜன், காலை எடுத்து ஒரு ...மீது வைத்ததும், அங்கு ...மைக்கப்பட்டிருந்த பதுமைகளுக் ...னச் சிரித்துக் கையை நீட்டி. ...லும், போஜராஜனே, இந்தச் ...காதனத்தின்மீது நீர்ஏறத் தகுதி ...டையவர்தானோ? எங்கள் விக்கிர...தித்தியர் இருந்தாண்ட இடத்...ல நீரோ ஏறுவது? அதற்கேற்ற ...தீரச் செயல் நீர் ஏதேனும் ...ய்ததுண்டோ? கேளும் மன்...னே, முன்னமொரு நாள் எமது ...னன்..........." என்று ஆரம்...த்து விக்கிரமாதித்தியன் செய்த ...ச் செயலொன்றைச் சொல்லு...ம், அன்றைய பொழுது அத்...டன் முடியுமாம். மன்னனும் ...முடைந்து அந்தப்புரம் சென்று ...வையர் தேற்றத் தேறுவானும்.

...இது கதை! ஆனால் இக்கதைக்கு ...பாக உள்ளது இன்று பதவி ஏற்ற ...ங்கிரஸை, நாம் நோக்குங்காலத்து. ...தயில் பதுமைகள் கேட்டன. ...ங்கு மந்சள் ராஜனை மக்களே ...ட்கிறார்கள், "அவர்கள் (ஜஸ்டிஸ் ...சியினர்) இருந்த இடத்திற்கு ...கள் வந்தீர்களே! என்ன செய்ய ...லீர்? எதைச் செய்தீர்? ஏன் ...ன்றும் செய்ய முடியவில்லை?" ...ன்று அடுக்கடுக்காகக் கேட்கின்ற...ர். கேள்விகள் எழ எழ, காங்கிரஸ் ...ந்திரிகள் திண்டாடுகின்றனர். ...ாஜராஜன், பதுமைகள் எங்ஙனம் ...பசும், என எண்ணி ஏமாந்தான். ...வர்களும் நமக்கு ஓட்டு அளித்த ...ர்கள் நம்மை ஏன் கேள்விகள் கேட்கப் போகிறார்கள்? நமது ஆட்சியை வேண்டிப் பெற்றவர்கள் இனி ஒருபோதும் அதை ஆட்சேபியார் என்றே கருதினர். ஆனால் காண்பதென்ன?

"மிக முக்கியமான, வாழ்க்கைக்குத் தேவையான நன்மைகளைச் செய்து தரவேண்டுமென, கிராம மக்கள் கேட்கின்றனர். கண்களில் நீர் ததும்ப, செய்ய முடியாதே" என்று நாங்கள் சொல்லவேண்டி இருக்கிறது என்கிறார் கனம் கோபால ரெட்டியார்.

என்ன கேட்டார்களாம் கிராம மக்கள்? இவர்கள் தேர்தல் காலத்தில் புளுகிய சொற்கள் அத்தனையும் உண்மையில் நிகழ வேண்டுமெனக் கேட்கவில்லை. தேனும் பாலும் திரண்டோடும் என்றனர் மஞ்சள் பெட்டியை நிரப்பிக் கொள்ள. இன்று கிராமவாசிகள் தேனோ, பாலோ கேட்கவில்லை, தெளிநீர்—நல்ல தண்ணீர்—கேட்கிறார்கள், அதைத் தர முடியாது எனக் கையை விரித்துவிட்டுக் கனம் கோபால ரெட்டியார், தண்ணீர் கேட்டவர் முன்பு கண்ணீர் வடிக்கிறார்! பதுமை சும்மா இருக்குமா? போஜராஜனைக் கேட்டதைப்போல! "அந்தக் காலத்திலே ஜஸ்டிஸ் கட்சியினரால் செய்ய முடிந்ததை உம்மால் செய்ய முடியவில்லையே! ஏறு நீர் சிங்காதனத்தின்மீது. இறங்கும் ஐயனே" என்று சொல்கின்றனர்.

"கிராமப் புறங்களிலே சென்று பார்க்குமிடமெல்லாம் கஷ்டமாக இருக்கிறது. எங்கு சென்றாலும், அது தேவை, இது தேவை என மகஜர்கள் தரப்படுகின்றன. மக்கள் கேட்பதெல்லாம் மிக அவசியமானவை என்பதையும் காங்கிரஸ் மந்திரிகள் உணருகிறார்கள். சில ஜில்லாக்களிலே குடிக்கத் தண்ணீர் கேட்கிறார்கள், சில இடங்களிலே பள்ளிக்கூடங்கள் வேண்டுமென்கிறார்கள், சிலருக்குப் புது ரோடு வேண்டுமாம். இவைகளெல்லாம் கிராமவாசிகளின் வாழ்க்கைக்கு அத்யாவசியமான தேவைகள்தான். என்றாலும், மக்களின் கோரிக்கைகளை எல்லாம், மிக முக்கியமான கோரிக்கைகளைக் கூட நாங்கள் பூர்த்தி செய்ய 'முடியாது' எனக் கூறிவிடுகிறோம். இந்த சில்லறைச் சௌகரியங்களைச் செய்து முடிக்கவும் எங்களிடம் பணம் இல்லை" என்று கூறியுள்ளார் கனம் கோபால் ரெட்டியார்.

பதுமைகள் சிரிக்காதா! இறங்கு கீழே, இந்தப் பீடம் உனக்கல்ல என்று கூறுதா என்று கேட்கிறோம்.

பணம் இல்லையே தவிர, பாபம், மந்திரிகளுக்கு பலம் இல்லாமற் போகவில்லை

மக்களின் உரிமை எங்கே? 144 செக்ஷனை ஏன் உபயோகிக்கிறீர்கள்? என்பன போன்ற கேள்விகளை எங்கும், யாவரும் எப்போதும் கேட்டபடி உள்ளனராம். பணமில்லாத மந்திரிகளுக்கு பலம் மட்டும் இருப்பதால்தான் சௌகரியம் செய்து கொடுக்க முடியாதவர்கள் தம்மிடம் உள்ள பலத்தைக் கொண்டு மக்களுக்குத் தொல்லையாவது கொடுப்போம் எனச் செய்கின்றனர் போலும்!

போஜனுக்குக் கிடைத்த சிங்காதனத்திற்கு முப்பத்திரண்டு பதுமைகள் என்றால், காங்கிரசுக்குக் கிடைத்த ஆட்சி எனும் சிங்காதனத்துக்குச் சிறப்பாக ஆறு பதுமைகள் உண்டெனக் கொள்ளலாம். உழவர், தொழிலாளர், வியாபாரி, பார்ப்பனரல்லாதார், முஸ்லீம், தீண்டாதார் எனக் கூறலாம். இந்த ஆறு முகங்களில் எந்த முகமாவது சிரிப்புடன், திருப்தியுடன் வரவேற்கிறதா என்று எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம்.

"கிராமங்களில் பள்ளிகள் வைக்க, ரோடுகள் போட, வைத்தியசாலைகள் நிறுவ முடியவில்லை.

அவைகள் அவசியந்தான். ஆனால் எம்மால் முடியவில்லையே. வேறு வழிகளிலே பணம் சர்க்காருக்குக்

கொடுத்தால், நாங்கள் மேற்படி வசதிகளைச் செய்து கொடுப்போம்" —எனக் கனம் கோபால் ரெட்டியார் பேசியுள்ளார்.

வீர தீர கெம்பீரர், பங்கமில்லாச் சிங்கம், பயமறியாக் காளை, என்று கூறப்படும் கனம் கோபாலர், தமது கையாலாகாத்தன்மையை, முடியாமையைச் சொன்னார் என்றால், அது ஆச்சரியப்படக் கூடிய விஷயந்தான். எவரையும் மதியேன், எவர்க்கும் அஞ்சேன், எதிரியைத் திணற வைப்பேன், என இறுமாப்புடன் பேசும் இந்த மந்திரியாரால், ரோடுகள் போட, வைத்தியசாலைகள் அமைக்க, பள்ளிகள் நிறுவமுடியவில்லையானால், இவர் வேறு எதற்கு மந்திரியாக இருக்கிறார் என்று கேட்கிறோம். சட்டசபையிலே சால்ஜாப்புபேசவா? பொதுக் கூட்டங்களிலே சவடால் அடிக்கவா? ராணுவ அணிவகுப்பின் போது கவர்னர் எதிரில் கை கட்டி நின்று இளிக்கவா? எதற்குஇவர் மந்திரியாராக இருக்கிறார், என்பது தெரியவேண்டாமா? கதர்கட்டுங்கள் என விளம்பரப்பேச்சுப் பேசிக்கொண்டு, காந்தியைப் போற்றுங்கள் எனக் கீதம் பாடிக்கொண்டு இருப்பது மட்டுந்தான் மந்திரியாரின் தொழிலா?

முடியவில்லை என்றால் ஏன் பதவியில் ஒட்டிக்கொண்டு இருக்கவேண்டும்? வந்துவிடுவதுதானே வெளியே! முடிந்தவர்கள் சென்று கிராம வசதிகளைச் செய்கிறார்களா இல்லையா என்று பார்ப்போம் என்று கேட்கிறோம்.

காகிதப்பூ கண்ணுக்குக் காட்சிதான். ஆனால், அது மலரின் மாட்சியைப்பெறுமா? பதுமை பார்வைக்கு அழகுதான், ஆனால் அது பயன் தருமா? சந்தனக்கட்டையும் பிறகட்டைகளும் பார்வைக்கு ஒரேவிதமாகத்தான்இருக்கும். ஆனால்குணத்தில் வித்தியாசம் இல்லையோ? அதைப் போல மந்திரி என்றால் மட்டும் போதுமா? மந்திரிகள் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யவேண்டாமா? "எங்கள் மந்திரியார் எல்லா இலட்சணமும் பொருந்தியவர். அவர் ஏதேதோ அறிந்தவர். ஏராளமான ஓட்டுகளைப் பெற்றவர். ஆனால் அவர் ரோடு போடமாட்டார், பள்ளி வைக்கார், வைத்தியசாலை அருளார். அவரால் அதுமுடியாது" என்று கூறுவதானால் இந்தமண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கினீர்களே, என்று நாம் ஏன் தேசியத் தோழர்களைக்கேட்கக்கூடாது? இந்தச்சாதாரணவசதிகளைச் செய்து கொடுக்க முடியாது என்று சொல்வது இவர்களின் விளம்பரப்படுத்தப்பட்ட வீரத்துக்குப் பொருந்துமா! என்று ஏன் கேட்கமாட்டோம்.

இந்நாட்டைப் பொன்னாடு ஆக்கவும், வானிலுறு கங்கையை வரவழைக்கவும், தேனும் பாலும், ஓடவைக்கவும் வந்த மந்திரிகள், நாட்டிலே ரோடுகள் போடவும் எம்மால் முடியவில்லை என்று கூறுவது எவ்வளவு ஆபாசம்! ஏன் இது தேசபக்தக் கூட்டத்தாருக்குத் தெரியவில்லை என்று கேட்கிறோம்.

எவ்வளவுபச்சையாக, கூச்சமின்றி, பயமின்றிக் கூறுகிறார் மந்திரியார், எம்மால் முடியவில்லை என்று. இரட்டையாட்சி எனும் இடர் தரும் அரைகுறை அதிகாரத்தில் சிக்கி அவதிப்பட்டவர்கள், ஜஸ்டிஸ் மந்திரிகள், என்றாவது, ரோடு போடமுடியவில்லை, பள்ளிக்கூடம் ஏற்படுத்தப் பணமில்லை, வைத்தியசாலைக்குக்காசு இல்லை என்று சொன்னதுண்டா? நீங்கள் அப்படிப்பட்ட பேச்சைக் கேட்டதுணடா? என்று கேட்கிறோம்.

பொக்கிஷ இலாகாவோ, வரிபோடும் அதிகாரமோ தங்களிடம் இல்லாது, வெள்ளை அதிகாரியிடம் மனுபோட்டுப் பணம் பெற்று ஆட்சி நடத்திய ஜஸ்டிஸ் மந்திரிகள் கிராம வசதிகளை நடத்தி வைக்கவில்லையா? அந்தக்காலத்தில் அவர்களைக் கேலி கிண்டல் செய்து, 'நாங்கள் வந்தால் இவ்வளவுதானா செய்வோம், இப்படித்தானா ஆட்சி நடத்துவோம், கல்வி பெருகாதா, மக்கள்கஷ்டங்கள் குறையாதா, பஞ்சமும் பிணியும் போகாதா' என்றெல்லாம் கூறி ஓட்டு வாங்கியவர்களல்லவா? இந்த மந்திரிகளும், இவர்களின் கூட்டமும்! இன்று ஏன் முடியவில்லை!

"மந்திரி என்பதை மறந்து அவர் குற்றச் சாட்டுகளுக் கெல்லாம் பதில் சொல்வது போலவே பேசினார்" என்று, உருக்கமாக, தூத்துக்குடியில் காந்தி ஜெயந்திக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த தோழர் வீரபாகு பேசியிருக்கிறார், கனம் கோபாலரின்

பேச்சைக் கேட்டதால் ஏற்ப
அனுபவத்தின் காரணமாக, ம
என்பதை மறந்து பேசினார், எ
கனம் கோபாலரைப் புகழ்
எண்ணிக் கொண்டு இவ்விதம்
னார். 'இல்லை—இல்லை' என்ற ப
டுப் பாடினார் அமைச்சர்—ஏதே
சமாதானம் கூறிப் பார்த்தார்.
தப் போக்குக்கண்டு பூரித்துப்
றார் வீரபாகு அவர்கள்; தாம் பூ
ததுடன் திருப்தி அடையாமல்,
களையும் பூரிக்கச் சொல்கிறார்.
திரி என்பதை மறந்து பேசின
அதாவது கொஞ்சமும் அதி
தோரணை, ஆர்ப்பரிப்பு, பத
இன்றி மக்களை மதித்து, அட
ஒடுக்கமாக, அன்புடன் பே
என்று பொருளாம்!

ஐயா! ஊரிலே பஞ்சம்—நா
மிகவும் கஷ்டப்படுகிறோம், எ
மக்கள் கூறினால், கஷ்டப்ப
பிறந்தவர்களாயிற்றே, படுங்க
அதை என்னிடம் ஏன் கூறுகிறீ
ஏ! சிப்பாய்களே! இந்த அழுமூ
ளைச் சவுக்காலடித்து விரட்டு
என்று மந்திரிகூறாமல், "என்ன
வது! எங்களிடம் பணம் இல்லை
என்று சாந்தமாகப் பேசினா
அதற்கே அகமகிழ்கிறார், தூ
குடித் தலைவர்!!

மந்திரிகள் தந்திரமாகப் பேசுகி
கள், மக்கள் மன நிலையைத் தெரி
கொண்டிருப்பதால், இது
உண்மை. இதற்கு மந்திரிக்கு வி
தனியான மாண்பு இருப்பத
பேசுவது, அமைச்சரின் புன்ன
யைப் பரிசாகப் பெறும் ஏற்ப
வேறென்ன?

மக்கள், மெள்ளமெள்ள, உணர்
கொண்டு வருகிறார்கள்—சிங்
னம் ஏறிய ஆட்சியாளர்கள்,
லாற்றும் திறனற்றுள்ளனர் எ
பதை. ஏகாதிபத்ய ஏவலர்கள்என
எந்த ஜஸ்டிஸ் மந்திரிக
கேலி பேசி வந்தனரோ, அவர்
காட்டிய ஆற்றலின் அளவு க
அமோகமான அதிகாரமும், பெ
மக்களின் ஆதரவும் பெற்ற இந்
காங்கிரஸ் மந்திரிகளால், கா
முடியவில்லை என்பதை உணர்
வருகிறார்கள். சில இடங்களி
கேட்கவும் செய்கிறார்கள்—வழ
மாக, எடுத்தேன்கவிழ்த்தேன்என
பேசும் கனம் கோபாலர் போ
அமைச்சர்கள் கூட, அடக்க ஒ

(14-ம் பக்கம் பார்க்க)

# பெரியார் நமக்குத் தரும் பரிசு!

## அவரைத் தூற்றும் பண்பு நமக்கில்லை

போர்ஜரி செய்பவர்கள்!

பணமோசடி செய்பவர்கள்!

இந்த இரண்டு பலமான குற்றச்சாட்டுகளுக்கு ளாகிவிட்டீர்கள் அன்பர்களே! பல ஆண்டு உழைத்த ற்குப் பெரியார், தரும் இந்தக் கிழமைப் பரிசுகள் வை! கள்ளக் கையொப்பமிடுபவர்கள்! மோசக்காரர் ர்!! தீரர், வீரர், திராவிடர் என்று அழைத்தார், ண்ணை மூடிக்கொண்டு அவரைப் பின்பற்றுபவர் ாக இருந்த வரையில்—அவர் தீட்டிவிட்ட பகுத் றிவினைத் துணைகொண்டு அவருடைய சொல்லையும் யலையும் ஆராயும் போக்கு ஒரு சிறிதளவு காட்டி ர்கள், உடனே கோபம் பிறந்துவிட்டது—போர்ஜரி ய்பவர்கள் — மோசக்காரர்கள் — என்று ஏசுகிறார். ந்த ஏசலுரையால், மனம் புண்படும் தோழர்களுக்கு, ன், எத்தகைய சமாதானம் கூற முடியும் — நானும் ற்றலால் தாக்கப்பட்டுத் தாங்கிக்கொண்டு வருகி ன் என்பதை எடுத்துக்காட்டுவது தவிர.

நாடெங்கும் திராவிட முன்னேற்றக் கழகக் கிளை தழைக்கின்றன — நாடறிந்தவர்களும், நற்பணி ற்றி வந்தவர்களும், இக்கிளைகளை ஆங்காங்கு, வளம் த் தோன்றச் செய்து வருகிறார்கள் முறைப்படி, ழைய திராவிடர் கழகக் கிளைகளைக் கூட்டிக் கருத்து றிந்து-ஓட்டு எடுத்து. பெயரைத் திராவிட முன்னேற் கழகம் என்று மாற்றுவது என்ற தீர்மானத் க்கோ, அல்லது திராவிடர் கழகம் என்று இருக்கும் மைப்பைக் கலைத்துவிட்டுப் புதிய அமைப்பை ஏற் த்துவது என்ற தீர்மானத்துக்கோ, ஆதரவு இருக் து என்பது விளக்கமாகத் தெரிந்த பிறகே, திரா முன்னேற்றக் கழகக் கிளையைத் துவக்குகிறார்கள். தப்படிக்கு, யாரும் ஒப்பக்கூடிய முறையிலும், மையாகவும் செய்யப்படும், பெயர் மாற்றம் என்ற யலைத்தான், 'போர்ஜரி' என்று கூறி, இழித்தும் த்துப் பேசுகிறார் பெரியார்.

அவர் பலவகையிலும், நம்மை எல்லாம்விடப் ரியவர்; வயதில். வசதியில், வல்லமையில். அவர் தூற் ம் போது, நாம், என்ன செய்ய முடியும், தாங்கிக் ள்வது தவிர! அவர் தூற்றுகிற காரணமே கூட, துடிப்புள்ள இளைஞர்களை இத்தகு சுடு சொல் கேட் சகியாமல், திருப்பித் தாக்குவர் தூற்றலுரைகளால், னே நாட்டவருக்கு அந்த உரைகளைக் காட்டி, ருக்கமாய்ப் பேசி, ஆதரவு தேடுவோம், என்பதுதான். ம் அவருடைய தந்திரமான திட்டத்துக்கு இரை க் கூடாது என்பதற்காக மட்டுமல்ல, நான், உங் , அவரிடமிருந்து கிடைக்கும் மோசமான ஏசலுரை த் தாங்கிக் கொள்ளச் சொல்வது—வேறு உண்மை ன காரணத்துக்காகவுந்தான். இன்றளவிலும், நாம்; வரால் நாடும் நாமும் அடைந்துள்ள நற்பயனைமறந்த வர்களல்ல—எனவே அவரைத் தூற்றும் இழிகுணம் நமக்கு ஏற்படவில்லை, எவ்வளவுதான் அவர் சிரமப் பட்டுக் குத்தி குத்திப் பார்த்தாலும் ஏற்படவில்லை—ஏற்படவும் கூடாது.

நம்மை அவர் காரணமின்றிக் கண்டித்த வண்ணம் இருப்பதையும், நாம் அந்தக் கண்டனங்களைத் தாங்கிக் கொள்வதையும், நாடு காண்கிறது—நாட்டின் நல்ல தீர்ப்புக் கிடைக்கும்.

போர்ஜரி—மோசடி—என்று கிளைக்கழக அமைப் புக்கான, பெயர் மாற்றும் செயலை இவர் குறிப்பிடு கிறாரோ, அந்த நடவடிக்கைகளை, அந்தந்த ஊராரும், ஊராள்வோரின் ஒற்றர்களும், நடுநிலையாளர்களும், கூர்ந்து கவனித்துக்கொண்டுதான் வருகிறார்கள். அவர் கள் அறிவார்கள், நாம் மேற்கொண்டுள்ளது நேர்மை யான செயலா, அல்லது மோசடியா என்பதை.

ஏதோ, வழக்குகள் கிளம்பலாம் என்றும் கூறு கிறார்; வந்தால் அந்த வழக்குகளையும் கவனிக்க வேண் டியது தான்—வேறென்ன செய்வது. வரட்டும். அவரைவிட்டுப் பிரிவது என்றநிலைமையே ஏற்பட்டான பிறகு, மற்ற இன்னல்கள் எவையும், தாங்கிக்கொள்ள முடியாதனவாகவா இருந்துவிடும்! இன்னல்பல எம்மை வந்து சூழினும், நாம் இருக்கும்வரை, நமது முயற்சி யும் இருந்து தீரும், என்ற பண்பு நம்மிடம் பட்டுப் போகவில்லை. நமது உள்ளத்திலே நேர்மை இருக்கும் போது, நாம் மேற்கொண்டுள்ள செயலிலே தூய்மை இருக்கும்போது, இன்னல் வரக்கூடும் என்பது பற்றிய சிந்தனைக்கு இடம் எப்படி இருக்க முடியும்!

ஒரு பெரிய தவறான கருத்தைக் கொண்டுவிட்டு, அதன் பயனாக மிகுந்த கஷ்டப்படுகிறார் பெரியார். அதாவது, நான் ஏதோ, மிக மிகப் பிரயாசை எடுத்துக் கொண்டு, தந்திரமாகத் திட்டமிட்டு, ஊரெங்கும் அன் பர்களைத் தூது அனுப்பி, ஒரு எதிர்ப்பு முன்னணியை அமைத்து வைத்திருப்பதாகக் கருதுகிறார். எதிர்ப்பு முன்னணி அமைந்திருப்பதும் உண்மை—அது இன்று, தனி அமைப்பாகத் தழைத்திருப்பதும் உண்மை; ஆனால் இந்த நிலைமையை உண்டாக்க நான் ஏதோ இரவு பகலாக, சாமர்த்தியத்தை எல்லாம் செலவிட்டு வந்திருக்கிறேன், என்று எண்ணுகிறாரே, அதுதான் தவறு. இந்தத் தவறான கருத்திலிருந்து, மற்றும் பலப் பல தவறுகள் முளைக்கின்றன—சகஜமாகவே.

நிலைமை என்னை உண்டாக்கிற்று — நிந்தனை என்னை வளர்க்கிறது.

நிலைமையை நான் உண்டாக்கவில்லை—நிந்தனை எனக்குப் பழக்கமற்ற காரியம்.

திராவிடர் கழகத்திலே பிளவும் பேதமும் ஏற் படா முன்பு, என்னை அழைப்பதிலே ஒரு ஆனந்தமும் வரவேற்று உபசரிப்பதிலே ஒரு பூரிப்பும், இன்று

# ஆகஸ்டில் கிடைக்காத ஆதரவு

# இப்போது எப்படிக் கிடைத்தது?

பேதப்பட்டதால் கோபப்பட்டுள்ள பல தோழர்களுக்கு இருந்த நாட்களிலேயே, என்மீது இருந்துவந்த புகார், நான் அக்கறையற்று இருக்கிறேன்—தொடர்பு அற்று இருக்கிறேன்-பத்துத் தடவைகள் தொல்லை படுத்தினால் தான் ஒரு தடவை வருகிறேன்—என்பதையாகும். மாலையும் மகிழ்ச்சியும், அன்பும் ஆதரவும் தருவதற்கு, நீடாமங்கலம் ஆறுமுகமும், நடிகவேள் ராதாவும், நாட்டாம்பள்ளி வெங்கட்ராமனவர்களும் மற்றும் பல அன்பர்களும், விரும்பியிருந்த போதே, நான், ஏறத்தாழ நழுவிக்கொண்டு இருந்தவன். அப்படிப்பட்ட சுபாவக்காரனாகிய நான், ஏதோ, விநாடிக்கு விநாடி திட்டமிட்டு, ஊரூருக்கும் உள்ளவர்களின் கணக்கெடுத்து, திட்டமிட்டு, எதிர்ப்பு முன்னணியை ஏற்படுத்தியதாக எண்ணுவது, என்னை அறிந்திருந்தும், சரியாகப் புரிந்து கொள்ளாத குற்றம் தான்.

பெரியாரின் திருமண ஏற்பாடு, இயற்கையாக உண்டாக்கிய நிலைமை தான், எதிர்ப்பு முன்னணி அமைந்ததற்குக் காரணம்—நான் அல்ல.

நான், திருமண விஷயமாக எடுத்து எழுதியதனால் அல்லவா இந்தநிலைமை ஏற்பட்டது என்று எண்ணிடத் தோன்றும். அதுவும் அல்லக் காரணம். நான், அதை எழுதும் போதே, என் ஒருவனுடைய கருத்தாகவோ, பிரசாரமாகவோ அந்த அறிக்கை உருவெடுக்கவில்லை. பெரியாரின் திருமணஏற்பாட்டினால், உள்ளம்கொதித்த தோழர்கள் பலரின் எண்ணத் தொகுப்பாகவே வெளி வந்தது. அதாவது நான், அந்த அறிக்கையை வெளியிடும்போதே, எதிர்ப்பு முன்னணி அமைந்துவிட்டது—நான் அல்ல அமைத்தது. அதாவது, எதிர்ப்பு முன்னணி, என் கபடம் அல்லது கயமைத்தனம், தந்திரம் அல்லது திறமை, ஓயாத வேலை அல்லது மயக்கும் திட்டம், என்பவைகளால் அமைந்தது அல்ல—இயற்கையாகவும், ஜனநாயக முறைப்படியும் அமைந்தது, எனவேதான், அந்த முன்னணியிலே 'ஜீவசக்தி' இருக்கிறது.

இதை உணர்ந்தால்தான், நிலைமையை உள்ளபடி கணித்துக்கொள்ள முடியும்.

பெரியாரும் அவருடைய ஆதரவாளர்களும், இந்த இடத்திலே தான், தவறான கருத்தைக் கொண்டு விடுகின்றனர். நான் விடாப்பிடியாக இருந்துகொண்டு, விஷமத்தனமான பிரசாரம் செய்து, பலரை மயக்கிக் கெடுத்துவிட்டேன், அதன் பயனாகவே ஒரு எதிர்ப்பு முன்னணி ஏற்பட்டுவிட்டது என்று எண்ணுகிறார்கள். தவறு. தவறு. பெருந் தவறு. நிலைமை இயற்கையாகவும், ஜனநாயக முறைப்படியும் வளர்ந்தது.

நான் ஒரு அறிக்கை வெளியிட்டா, இவ்வளவு தோழர்களை மயக்கிவிடமுடியும்! அவ்வளவு ஆற்றல் இருப்பதானால், நான் ஆகஸ்டின்போது வெளியிட்ட அறிக்கையும் ஒரு எதிர்ப்பு முன்னணியை அமைத்திருக்கவேண்டுமே! நடைபெற்றதா அதுபோல!! இ... லையே! நடைபெறாது என்பது எனக்கே தெரிந்துதா... அந்த அறிக்கையிலேயே, என் மீது ஒழுங்கு ந... வடிக்கை எடுப்பதானாலும் எடுக்கட்டும், என்று எழு... னேன். ஆகஸ்ட்டு அறிக்கையின்போது, ஆசைத்தம்... யும் வள்ளிமுத்துவும், சிற்றரசும் சீனுவாசனும், ம... றும் எண்ணற்ற பல தோழர்களும், அண்ணா எழு... விட்டார், ஆகவே அதுதான் சரி, என்று கூறினார்க... அவ்வளவு நெஞ்சு உரம் அற்றவர்களல்லவே, நம... தோழர்கள். என் கருத்தை ஒப்புக்கொள்வதற்கில்... என்று கூறினர்—கண்ணியமாக.

ஆகஸ்ட்டிலே நான் தீட்டிய அறிக்கைக்குக் கிடை... காத 'ஆதரவு', திருமணப் பிரச்னையின்போது, நா... வெளியிட்ட கருத்துக்குக் கிடைத்ததற்கு காரண... என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டாம... இதை நன்கு சிந்தித்தால், தெளிவாகத் தெரிந்துவிடு... எதிர்ப்பு முன்னணி என்பது என் மயக்கமொழியின் விளைவுமல்ல, சுயநலத் திட்டத்தின் வெற்றியுமல்ல... இயற்கையின் விளைவு—ஜனநாயக அரும்பு என்ப... விளங்கும்.

எனவே, வீணாகத் தவறான கருத்தை மனதி... தங்க இடம் தந்துவிட்டு, மேலால் பல தவறான கரு... துக்களை முளைத்திடச் செய்யவேண்டாம் என்று, ஆ... வாளர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடிப்படையிலேயே தவறான எண்ணம் கொண்... விடுவதனாலேதான், பிறகு மள மள வென்று தவறுக... வளர வழி ஏற்படுகிறது.—போர்ஜரி—மோசடி... என்ற அளவுக்குத் தூற்றலுரை வீசும் போக்கு, ... பக்கம் இருந்து வருகிறது.

என் தந்திரத்தாலும் சுயநலத்தாலுமே இந்... புதிய அமைப்பு ஏற்பட்டுவிட்டது என்று தவறாக எ... ணுவதால்தான், இந்த அமைப்பைக் குலைக்கும் வ... என்னைத் தூற்றுவது, பங்கப்படுத்துவது, என்று அ... கள் எண்ணி, என்னை ஆராய்ச்சிக்குரிய பொருளாக... ஆக்கிக்கொண்டார்கள். என்நிலைமை, நினைப்பு, நடவ... கைகள், எல்லாவற்றையும் ஆராயவும், அப்போ... எனக்குத் தெரியும்! இதனாலேயே தெரியவில்லையா! இ... படி எல்லாம் செய்தவன்தானே! என்றெல்லாம் பே... மாகிவிட்டனர்.

இந்தத் தவறான முறையினாலே திராவிட மு... னேற்றக் கழகம் எனும் புதிய அமைப்பை அழித்... விடமுடியாது. நானேதான் இதன் அமைப்புக்குக் ... ணமென்றால், என்னை நிந்தித்து, அமைப்பை ஒழிப்... என்பது முடியக்கூடிய காரியம். ஆனால், இயற்கையி... விளைவாகவும், எண்ணற்ற தோழர்களின் இதய ஒலி... கவும், ஜனநாயக அரும்பாகவும் உள்ளது இ... அமைப்பு—என்னை இழித்தும் பழித்தும் பேசி இ... அமைப்பை ஒழித்துவிட முடியாது. இந்த அமைப்...

# துரோகிக்குத் தனி மாநாட்டிலே தலைமைப் பதவியா?

## சுயநலத்துக்கு அவசியமே இல்லை

, என் திறத்தையே அடிப்படையாகக் கொண்டது
ல—எண்ணற்ற திராவிடத் தோழர்களின் திறத்
மீது கட்டப்பட்டிருக்கிறது. பெரியார் ஒருவரின்
த்தாலும் உழைப்பாலுமே திராவிடர்கழகம் என்ற
வம் இருக்கிறது என்று கூறிக்குதூகலிப்பதுபோல
கூறவில்லை—கூறவும்மாட்டேன்—உண்மையு
ரது. இதுவரையிலேயே கூட, திராவிட முன்னேற்
கழகம் என்பது அமைவதற்கான அரும்பணியை,
னைவிட மற்றவர்கள்தான் அதிகம் செய்திருக்கிறார்
—செய்துகொண்டு வருகிறார்கள்—என்பதைப்
நமையுடனும் பூரிப்புடனும் கூறிக்கொள்கிறேன்.
ப்பணியாற்றும் அன்பர்களுக்கு நன்றியை தெரி
துக்கொள்கிறேன். இன்றளவு வரையிலே, அந்த
மை நண்பர்களிடமிருந்து, 'இதைச் செய்யவேண்
—இவ்விதம் இருக்கவேண்டும்—" என்று எனக்குக்
ங்கள், உற்சாகமும் உணர்ச்சியும் தாத்தக்க வண்
, வந்தவண்ணம் உள்ளனவே தவிர, ஆள்பிடிப்பது
ழும் பார்ப்பது—தூது அனுப்புவது—என்ற
றகளின்படி, நான் ஏதும் செய்ததுமில்லை—பழக்க
ஏற்படாது—பயிற்சியே கிடையாது. எனவேதான்
னைத் தூற்றுவதன் மூலம், திராவிடமுன்னேற்றக்
த்தை ஒழிக்கமுடியாது என்று கூறுகிறேன்.

வடாற்காடுமாவட்டத் திராவிடர்கழகம், திராவிட
னேற்றக் கழகமாக மாற்றப்பட்டது—காஞ்சிபுரத்
கு பன்னிரண்டு மைல் தொலைவிலுள்ள, திருவத்தி
தில்நடைபெற்றகூட்டத்தின்விளைவாகத் திருவத்தி
தோழர் சுப்பராயனார் இதை முன்னின்று நடத்தி
த்தார். நான் காஞ்சிபுரத்தில்தான் ஐந்து நாட்க
இருந்து வருகிறேன்—அன்பர் சுப்பராயனும்
க்கு மிகவும் வேண்டியவர்தான்-பன்னிரண்டு மைல்
இருக்கும் திருவத்திபுரம்—எனினும் நான் அவ
கண்டு பேசியிருக்கிறேனா இதுபற்றி, அல்லது
மூலமாவது அவருக்குக் கருத்தளித்தேனா-இல்லை.
பர், நண்பர், அருகாமையில் உள்ளவர்—எனினும்
ரைக் காணவுமில்லை, காரியம், இன்னவிதம் நடை
வேண்டும் என்று கடிதம் அனுப்பவுமில்லை—ஏன்—
க்கு, இந்தப்பிரச்னை சம்பந்தமாக எவ்வளவு
றுப்பும் கவலையும் உண்டோ, அதற்கு மேலாக
ருக்கு இருக்கும். ஆகவே அவர், எது சரியோ
தச்செய்வார், அவருக்கு அதற்கு ஏற்ற ஆற்ற
ண்டு என்ற நம்பிக்கை எனக்கு! என் நம்பிக்கையின்
தான் காரியமும்நடைபெற்றிருக்கிறது. ஏன் இதைக்
னேன் என்றால், திராவிட முன்னேற்றக் கழகத்துக்
காரியங்கள் இதுவரை நடைபெற்றிருப்பவை அவ்
வும் திருவத்திபுரத்து நடவடிக்கைபோலவே, என்
ண்டுதல் அல்லது தூபம் இல்லாமல், இயற்கையாக,
நாயக முறைப்படிதான் நடைபெற்றுள்ளன. ஒரு
மனிதனின், சுயநலக்காரனின், துரோகியின், வெற்றி
ல—உள்ளம் கொதித்த எண்ணற்ற திராவிடத்
தோழர்களின் திறமை, வெற்றி. இதை அழிக்க என்னைத் தூற்றுவதா, வழி! அல்ல! அல்ல! என்னைவளர்த்து விடும்வழி இதைவிட வேறு இல்லை!!

அவர் நினைப்பதுபோலவும், பேசிவருவதுபோலவும், இன்றைய நிலைமை நான் திட்டமிட்டுக்கட்டிக்காட்டுவதுமல்ல, என்னுடைய நெடுநாள் விருப்பமுமல்ல.

திராவிடர்கழகம், அரசியலைக் கைப்பற்றி ஆட்சிப் பீடம் ஏறும் கட்சியாக அமைந்திருந்தாலாவது, என் மீதும்சரி, வேறு யார்மீதும் சரி, கழகத்தைக்கைப்பற்றி பதவி பிடிக்க, சுயநலத்திட்டமிடுகிறார்கள் என்று கூறவாவது இடம் இருக்கும். உடனடிஅரசியல் இலாப வேட்டைக்கருவியாகத் திராவிடர் கழகம் இல்லை-இந்தப் போக்கை நான் எப்போதுமே ஆதரித்து வந்திருக்கிறேன்—இப்போதும் அதே கருத்துடனேயே இருக்கிறேன்! இந்நிலையில், சுயநலத்துக்கு அவசியம்தான்என்ன இருக்கமுடியும்!

சுயநலக்காரர்கள் — துரோகிகள் என்று ஓயாமல் பேசிவிடுவதால், மக்கள் அதை அப்படியே நம்பிவிடுவார்கள் என்று பெரியார் எண்ணுவது! என்ன சுயநலம் காணமுடியும் இதிலே! யாரைத் துரோகம் செய்திருக்கிறான்? என்று சிந்தித்தும்பார்க்காமலேயா இருந்துவிடுவார்கள் மக்கள்.

இவ்வளவு பெரியபுயலுக்குப் பிறகும் தம்முடன் இருப்பவருக்கு, உற்சாகமூட்டவும், அவர்களின் நம்பிக்கை முறிந்துவிடாதபடி பாதுகாத்துக்கொள்ளவுமே பெரியார் இதுபோலப் பேசிக்கொண்டிருக்கிறார், என்பது எனக்கு நன்றாகப்புரிகிறது. ஆகவேதான் எனக்கும் கோபமும் வருத்தமும் வருவதில்லை.

இந்தச்சூட்சமத்தைப் புரிந்துகொண்டீர்களானால்' உங்களுக்கும், அவர் சுடுசொல்கூறும்போது, கோபமோ வருத்தமோ ஏற்படாது என்பதற்காகவே இதை எடுத்துக்காட்டுகிறேன்.

திட்டமிட்டு வேலைசெய்து, மக்களை நான் மயக்கிவிட்டதாகக் குறைகூறுவதுடன், நான் துரோகசிந்தனையுடன், மூன்றாண்டுகளாகவே இருந்துவந்ததாகவும் ஜாடைகாட்டிப்பேசி வருகிறார். இதை அவர் அவ்வப்போது பேசிவந்தாராம்!! மூன்றாண்டுகளுக்கு முன்பிருந்தே நான் துரோகி என்பது தெரிந்திருந்ததாமே, ஏன் பிறகு, சிலமாதங்களுக்குமுன் புதுவைமாநாட்டிலே 'பெட்டிச்சாவியைக்' கொடுப்பதாகக்கூறிப் பெருமைப்படுத்தினார். துரோகிக்கு, தனிமாநாட்டிலே தலைமைப்பதவியா! பரிசா! இலஞ்சமா? அல்லது பங்கு தருவதாக ஜாடை காட்டுவதா? என்ன இதற்குப்பொருள்? இன்று அவர் கூறுகிறாரே, 'துரோகி' என்று. இது துளியாவது எனக்குப்புரியும்படி அவர் பேச்சாலோ, செயலாலோ ஜாடையாகக்காட்டியிருந்தால்கூடப் போதும், நான் அவர் இருக்கும்திக்கில்கூடத் தலைவைத்து படுத்திருக்கமாட்டேனே!

(10-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 16—10—49 [காஞ்சி

# கைத்தறியாளர் குறை தீர!

●

எல்லாம் இங்கே உண்டு—எனவே இல்லாதது எதுவும் இல்லை என்பதாக நம் நாட்டில் ஒரு பழமொழி உண்டு —இப்போதல்ல-முன்னொரு காலத்தில்!

ஆனால் இப்போது அந்த நிலைமை மாறிவிட்டது—இல்லை, மாற்றப்பட்டு விட்டது. எல்லாம் இங்கே இருந்தது—இப்போது ஒன்றும் இல்லை; எது வேண்டுமானாலும் அதைப்பெற இன்னொருவரை எதிர்பார்த்து நிற்கவேண்டியநிலைக்கு வந்துவிட்டது, என்று கூறக் கூடிய அளவுக்கு வளமும் வசதியும் நிரம்பிய நம்நாடு ஆக்கப் பட்டுவிட்டது.

உழவுத் தொழிலும் அதனால் பெறப்படும் பல்வகை உணவுப் பொருள்களும், வேறு எந்த நாட்டைப் பார்க்கிலும் இத்தென்னாட்டிலே மிகுதியாக உள்ளன என்ற பெருமை இருந்தது—இப்போதும் தென்னாடு ஒரு விவசாய நாடே என்று சொல்லக்கூடிய அளவுக்கு, அத்தொழிலிலே தான் நாம் அதிகமாக ஈடுபட்டிருக்கிறோம்.

கைத்தொழிலில் மிக முக்கியமான விவசாயத் தொழிலுக்கு அடுத்தபடியாகஉள்ளது கைத்தறித் தொழில் ஒன்றுதான். இந்தக் கைத்தறித் தொழிலுக்கு ஈடாக வேறு எந்த நாடும் தென்னாட்டுடன் போட்டி போட முடியாதென்ற பெருமையும் திராவிட நாட்டுக்கே உண்டு என்பது மிகைபடக் கூறுவதாகாது.

இப்படிப்பட்ட சிறந்த தொழிலுக்கு இப்போது பெரிய ஆபத்து நேரிட்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்றன என்ற செய்திகள் நம்மைத் திடுக்கிடும்படி செய்துள்ளன. கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் பத்துலட்சத்துக்கு மேற்பட்ட திராவிடத் தொழிலாளர்களின் நிலை இத்தேக்கத்தால் என்ன ஆகுமோ? எந்த நிலைக்கு அவர்களைக் கொண்டு வந்து விடுமோ என்பதனை எண்ணிப் பார்க்கும் எவரும் இந்த நிலைகண்டு கலங்காமல் இருக்கமுடியாது.

திராவிடப் பெருங்குடி மக்களின் முக்கிய தொழில்களில் ஒன்றான கைத்தறி நெசவுத் தொழிலுக்கும் பேராபத்துச்சூழ்ந்துகொண்டதென்றால்,இதனைவிடமோசமானநிலைவேறு என்ன ஏற்படமுடியும்? முன்பெல்லாம் ஒரு கைத்தறித் தொழிலாளிக்குக் கிடைக்கும் கூலி ரூபா ஒன்றே கால் என்றால், இப்போது கிடைப்பது ஐந்தணாத்தான். இந்த நிலையில் கைத்தறித் துணிகளும் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கிறதென்றால், ஏழை நெசவாளியின் நிலை என்ன ஆகும் என்பதை எண்ணிப் பார்க்கும் போதே ஏக்கம் உண்டாகிறது.

விவசாயத் தொழில் மிகுந்த இத்தென்னாட்டில், விடிந்தால் கஞ்சிக்குக் கூடக் கால்படி அரிசி கிடைக்கவில்லையே என்று சதா வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு தொழிலாளிக்கு மேலும் வேதனையை மூட்டும் வகையில் அவனுடைய தொழிலுக்கும் முட்டுக்கட்டை ஏற்பட்டால் அவனுடைய மனோ நிலை என்னென்ன மாற்றங்களுக்கு ஆளாகி, என்னென்ன காரியங்களைச் செய்யத் தூண்டுமோ என்ற அச்சம் பொதுவாக எல்லாருக்குமே ஏற்படும். இந்தப் பயங்கர நிலை ஏற்படாமல் பார்த்துக்கொள்வது சர்க்காரின் கடமையாகும்.

நெசவு செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராகவுள்ள கைத்தறித் துணிகள் விற்கப்படாமல் தேங்கிக் கிடப்பதன் காரணத்தை அறிந்து அதற்கான பரிகாரங்களைச் சர்க்கார் செய்யவேண்டும்.

கைத்தறி நெசவாளரின் கூட்டுறவுச் சொசைட்டிகளிலும் பிறஇடங்களிலும் சுமார் மூன்றரைக் கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறி நெசவுத் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன என்ற புள்ளி விபரங்கள் காட்டப்படுகின்றன. இதற்குக் காரணம் என்ன?

கைத்தறித் துணியின் விலை, மற்றத் துணிகளைக் காட்டிலும் அதி[க]மாக இருப்பதே இத்தேக்கத்திற்கு காரணம் என்று கூறப்பட்டாலும் அதுவே முக்கிய காரணம் என்[று] கூறிவிட முடியாது. சாதாரணமா[க] எப்போதுமே கைத்தறி நெசவு[த்] துணி, மற்றத் துணிகளைப் பார்[க்]கிலும் சிறிது அதிகமான விலைக்[கு]தான் விற்கப்படுவது வழக்கம். இதற்குக் காரணம், கைத்தறியி[ல்] நெசவு செய்யப்படும் துணிக்[கு] உழைப்பும் முயற்சியும் அதிக[ம்] என்பதுதான்.

எனவே, கைத்தறித் துணியின் விலை அதிகமாக இருப்பதால்தான் அது விற்பனையாகாமல் தேங்கி[க்] கிடக்கிறது என்று கூறிவிட முடியாது. இப்போது அதற்கு ஒ[ரு] போட்டி ஏற்பட்டுவிட்டதே இத[ற்]குக் காரணம் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

கைத்தறித் துணியோடு மி[ல்] துணி அளவுக்கு மிஞ்சிப் போட்டி போடத் துவங்கியதாலேயே இ[ந்த] தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. வடநாட்டு மில்கள் அளவுக்கு மிஞ்சி[ய] துணிகளை உற்பத்தி செய்து இங்[கு] கொண்டுவந்து குவித்த வண்ணமிருப்பதால், தென்னாட்டுக் கைத்தறி நெசவுத் துணிகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்றன. அதோடு மில் துணிகள் கைத்தறித் துணிகளைப் பார்க்கிலும் குறைந்த விலைக்கு விற்கக்கூடிய வாய்ப்பும் வசதியும் மில் முதலாளிக்கு இருப்பதால், கைத்தறி நெசவாளர்கள் அவர்களோடு போட்டி போட முடியாமல் இருக்கிறது. தென்னாடும் வடநாட்டுடன் இயந்திரத் தொழிலில் போட்டி போடக்கூடிய நிலை ஏற்பட்டாலன்றி இந்தப் போட்டியைத் தவிர்க்க முடியாது. ஆனால் நம் மாகாண சர்க்கார் வடநாட்டு மில் துணிகள் இங்கு வருவதற்கு வழி திறந்து விட்டிருக்கிறதேயன்றி இங்கும் வடநாடுபோல் மில்களை உண்டாக்கி நாட்டின் வளத்தைப் பெருக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தைக் கொள்ளவே இல்லை. மாறாக, வடநாடு தென்னாட்டைச் சுரண்டுவதற்கான வழி வகைகளையே தான் செய்து கொடுத்துக்கொண்டு வருகிறது. மில் துணி ஒன்றில் மட்டுமல்ல, பொதுவாக எல்லாத் துறைகளிலுமே வடநாடு தென்னா[ட்டை]

ச் சுரண்டும் போக்கிலேயே
ள்ளது.

நல்ல வருவாய் தரக்கூடிய இனங்
எல்லாம் வடநாட்டிலுள்ள மத்
சர்க்காரிடமே போய்ச் சேரு
றன. எனவே, மத்திய சர்க்கா
உதவியும் நமக்கில்லை. மத்திய
க்காரை ஆட்டிப் படைக்கும்
நாட்டு மில் முதலாளிகளால்
து இறக்குமதி செய்யப்படும்
வுக்கும் தேவைக்கும் மிஞ்சிய
ிகளால் நம்முடைய உழைப்பும்
தியமும் பாழாக்கப்படுகின்றன.
னுல் இங்கு சிறிதளவு
பத்தி செய்யப்படும் கைத்தறி
வுத் துணிகளும் விற்பனையாகா
தேங்கிக் கிடக்கின்றன.

டநாட்டு மில்முதலாளிகள் செய்
இன்னுமொரு பெரியகொடுமை
னவென்ருல், தாங்கள் உற்பத்தி
யும் எல்லாரகத் துணிகளையுமே
ஞட்டவர் வாங்கவேண்டு
ன்று வற்புறுத்துகிருர்கள், அதா
, சென்னை மாகாணத்துக்கு இன்
ன ரகமில் துணிதான் தேவை.
ற்றைமட்டும் அனுப்புங்கள்
று கேட்டால், "எங்கள் மில்
ல் உற்பத்தியாகும் எல்லா ரகத்
ிகளையுமே அனுப்புவோம், எல்
ற்றையும் நீங்கள் வாங்கித்தான்
வண்டும்" என்று கூறுகிருர்கள்
ருல், வடநாட்டு மில் முதலாளி
ந்த அளவுக்குத் தென்ஞட்
மீது ஆதிக்கம் செலுத்தவிரும்பு
கள் என்பது நன்கு புலனுகும்.

வ்வளவு ஆதிக்க வெறி வட
மில் முதலாளிகளுக்கு இருக்
பாது-இவ்வளவு கெடுபிடி
ும் பார்த்துக் கொண்டு
னை அரசாங்கம் வாளா இருக்
பாது, தென்னட்டுக் கைத்தறி
த்துணிகள் விற்பனையாகாமல்
க்கிடக்கின்றன என்ருல்
ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

ன்னை மாகாணத்திலுள்ள கைத்
நெசவாளர்களின் குறைகள்
கப்படுவதற்குச் சில பரிகாரங்
அகில இந்திய ஜவுளிக் கண்ட்
போர்ட்மெம்பரான தோழர்
ல். சங்கரசுப்பிரமணியம் அவர்
கூறியுள்ளார். அவற்றில் முக்
னது.

"சென்னை மாகாணத்தில்
சவாளர்கள் இப்படி அவதிப்
படும்போது பாம்பாய் மில் முத
லாளிகள் இந்த மாகாணத்தில்
மில் துணிகளைக் குவிக்கிருர்கள்.
இந்தக் குவிப்பு முறை தடுக்கப்
பட வேண்டும்"

என்பதாகும். இதை நாமும் வர வேற்கிருேம். கைத்தறித் துணிகளைப் பொறுத்தவரையில் நெருக்கடி ஏற்பட்ட இந்தச் சமயத்தில்தான் வடநாடு தென்ஞட்டை ஆட்டிப் படைத்து ஆதிக்கம் செலுத்த விரும்புகிறது என்பதைச் சிலரால் உணர முடிகிறதே தவிர, பொதுவாகவே எல்லாத் துறைகளிலுமே, எப்போதுமே வடநாடு தென்ஞட்டை அடக்கி ஆள விரும்புகிறது — இதைத் தடுத்தாலொழியத் தென்ஞடு வளமாக வாழமுடியாதென்று நாம்கூறும் போதெல்லாம், நம்மைப்பார்த்து, வடநாடு தென்ஞடு என்று பிரித்துப் பேசுகிருர்கள் —பேதம் உண்டுபண்ணப் பார்க்கிருர்கள் தேசத் துரோகிகள் என்பதாக நம்மீது குற்றஞ்சுமத்தத் தெரிகிற அளவுக்கு, நாட்டின் உண்மை நிலைமை தெரிவதில்லை. எனவேதான் நாம் அவர்களின் தூற்றலைத் துச்சமாகக் கருதி, எப்போதாவது ஒரு சமயம் நாம் கூறும் உண்மைகளை அவர்கள் உணர்வார்கள்—ஒப்புக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன் செயலாற்றி வருகிருேம்.

எனவே இப்போதும் கூறுகிருேம், சென்னை மாகாணத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களின் இப்போதைய நெருக்கடியான நிலை, அவர்களைப் புரட்சிகரமான பாதைக்கு இழுத்துச் செல்வதற்கு முன்பே தக்க பரிகாரம் தேடுங்கள் என்று. வடநாட்டவரின் ஆதிக்கம் தென்ஞட்டவர்மீது எந்தவகையில் உருவெடுத்தாலும், அது, தென்ஞட்டவரின் வாழ்க்கையைப் பாதிக்கும் என்பதை அரசாங்கமும் நல்லறிவாளர்களும் உணர்ந்து ஆவன செய்ய வேண்டுமென்பதே எம்து விருப்பமும் வேண்டுகோளுமாகும்.

இப்படிப்பட்ட ஒவ்வொரு முக்கியமான பிரச்சனைகளின் போதும், வடநாடு தென்ஞட்டை ஆட்டிப் படைக்கிறதென்பதைஉணரும் அன்பர்கள், நாம் நடுநின்று கூறும் நாட்டுப் பிரிவினையின் அவசியம் எதனைக் குறிக்கோளாகக் கொண்டது என்பதனை இந்தச் சமயத்திலாவது உணர வேண்டுகிருேம்.

நாட்டுப் பிரிவினைக்காக நாம் கூறும் பல முக்கிய காரணங்கள் ஒரு புறம் இருக்கட்டும்—அவை, அந்தந்தச் சந்தர்ப்பம் வரும்போது, நாட்டுப் பிரிவினையை எதிர்ப்பவர்களாலேயே ஒப்புக்கொள்ளப்படும் என்பதை நாம் உறுதியாக நம்புகிருேம். இப்பொழுதுள்ள பிரச்னை நம் நாட்டுக் கைத்தறி நெசவாளரைப் பொறுத்ததாகும். அவர்கள் படும் அவதி எதனுல் ஏற்பட்டதென்பதை பிரிவினை எதிர்ப்பாளர்களே நன்கு உணருகிருர்கள். பம்பாய் ஆமதாபாத் போன்ற வடநாட்டு மில் துணிகள் இங்குவந்து குவிவதாலேயே இங்குள்ள கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்றன என்பதையும் உணருகிருர்கள்.

வடநாட்டு மில் துணிகள் ஏன்— எப்படி இங்குவந்து குவிகின்றன? வடநாட்டின் தொடர்பு தென்ஞட்டுக்கு இருப்பதால்தானே இந்த நிலை ஏற்படுகின்றது! தென்ஞடு வடநாட்டின் பிடியிலிருந்து விடுபட்டு விடுமானுல், இப்படிப்பட்ட பலாத்கார இறக்குமதிகள் செய்ய முடியுமா என்பதனை, நாட்டுப் பிரிவினையால் 'நாசமே' உண்டாகும் என்று நாக்கூசாது கூறும் தேசபக்தர்கள் உணர வேண்டுகிருேம்.

நாட்டுப் பிரிவினை என்ற நல்ல லட்சியம் ஈடேறிவிட்டால், ஒரு நாட்டுக்கு அப்பாற்பட்ட பிறநாட்டார் அந்த நாட்டின் அனுமதியின்றி எந்தப் பொருளையும் தங்கள் இஷ்டம்போல் கொண்டுவந்து குவிக்க மாட்டார்கள் — குவிக்க முடியாது. நமக்குத் தேவையானதைநம்முடைய அனுமதியின் பேரில்தான் அவர்கள் கொடுப்பார்கள் — கொடுக்க வேண்டும்.

எனவேதான், இன்று கைத்தறி நெசவாளருக்கு வடநாட்டவரால் ஏற்பட்டுள்ள ஆபத்தும், இன்னும் ஏற்பட இருக்கும் பல ஆபத்துகளும் நம்மை அணுகாமல் இருப்பதற்கு ஒரே ஒரு பரிகாரம் நாட்டுப்பிரிவினை தான்என்பதை வலியுறுத்துவதோடு, இன்று கைத்தறிநெசவாளருக்குள்ள ஆபத்தையும் உடனடியாகக் கவனித்து ஆவனசெய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிருேம்.

# ஆத்திரமும் ஆயாசமும் நமக்கு வேண்டாம்

7-ம் பக்கத் தொடர்ச்சி

திராவிடச் சமுதாயத்தின் விடுதலைக்குப் பாடுபடவேண்டிய மகத்தான பணிபுரிய வேண்டியவருக்கு துரோகியை ஒழிக்கும் வேலையும் வேறு ஏற்படவேண்டுமா, வேண்டாம் பாவம், என்று கூறிவிட்டே வெளிவந்திருப்பேனே! எப்போதுமே நான் இடம் கேட்டுக்கொண்டோ, கதவைத் தட்டியபடியோ இருந்து பழக்கப்பட்டவனல்ல. இப்போதுங்கூட, இரயிலிலே கூட்டம் அதிகம் என்றால் பேசாமல் நின்றுவிடுபவன்— இடித்துக் கொண்டே உள்ளே புகுந்துகொள்பவனல்ல. கழகத்தலைவர், என்னைச்சந்தேகிக்கிறார், துரோகி என்று எண்ணுகிறார் என்று துளிஜாடை தெரிந்திருந்தால்கூட, நான் அவர் அதுவரை காட்டிய அன்புக்கும் ஆதரவுக்கும் நன்றி செலுத்திவிட்டு, வெளியே வந்துவிட்டிருப்பேன். நான் பலதடவைகளிலே எடுத்துக்கூறியிருக்கிறபடி, இந்தப் பரந்தஉலகிலே, என்போன்ற சாமான்யர்களுக்கும்இடம் இருக்கிறது - ஆதீனங்களின் ஆதரவே இல்லாத பண்டாரங்கள் இல்லையா — அதுபோல இருந்துவிட்டிருப்பேன் ஒருதுளியும் ஜாடைகூடக் காட்டினதில்லை. என்னைச்சோம்பற்குணமுள்ளவன்என்று கண்டித்திருக்கிறார் வாலிபர்களுடன் கூடித்திரிகிறேன் என்று பேசியிருக்கிறார். 'துரோகி' என்று அவர்சொன்னதுமில்லை-அப்படி ஒருஎண்ணம் அவர் உள்ளத்திலே இருந்திருக்கக்கூடும் என்றுகூட நான் எண்ணிட நேரிட்டதில்லை. என்னிடம் அவர் காட்டிவந்த அன்பும் மரியாதையும், என்னைப்பல சமயங்களிலே வெட்கப்படும்படி செய்துவிட்டிருக்கிறது. நன்றாகக்கவனமிருக்கிறது, ஈரோட்டுக்கு என்னை முதன்முதலாக அவர் அழைத்தது பொதுவாழ்வில் ஈடுபடுவதின் விசேஷத்தைக் கூறினது — பிறகு நான் ஊர் திரும்பப்புறப்பட்டபோது, அவருடைய வீட்டுப் பெரியவண்டியைப்பூட்டி அதிலே நான் உட்கார்ந்துகொண்டு வண்டிகிளம்ப, அதன்பின்னோடு, பத்துவீடுவரையில் அவர் வந்தது—நான் வண்டிக்குள்ளே பதறி, நில்லுங்கள், வரவேண்டாம், நில்லுங்கள் என்று கூறினது—வெட்கப்பட்டது — ஆகிய காட்சிகள். அன்றுமுதல் திருமணப்பிரச்னை பயங்கரமான உருவம் எடுத்த நாள்வரையில், என்னிடம் அவர் நடந்துகொண்டமுறை என்னைப்பற்றி அவர் கேவலமான எண்ணமோ, கெடுதலான எண்ணமோ கொண்டிருக்கிறாரா, என்று யோசிக்க வேண்டிய அவசியத்தையே உண்டாக்கியதில்லை. பலதடவைகளில் என்னிடம் கோபித்துக்கொண்டிருக்கிறார்—நானும் கோபம் கொண்டிருக்கிறேன்-பலஆண்டுகளுக்கு முன்பு ஈரோட்டிலிருந்து விடுதலைவெளி வந்துகொண்டிருந்தபோது, கோபித்துக்கொண்டு, ஊருக்கே வந்துவிட்டிருக்கிறேன். என்னைச் சமாதானப்படுத்தவும், என்னிடம் தமக்கு உள்ள அன்பைக் காட்டவும், பெரியாரும், அவர் அண்ணாரும், தனித் தனியாக எனக்கு எழுதிய கடிதங்கள், என்னிடம் உள்ளன! இன்று என்னைப் பெரியார் 'துரோகி'ப் பட்டியலில் சேர்த்துப் பேசும்போது, நான் அந்தக் கடிதத்தைக் கவனப்படுத்திக்கொண்டு, சாந்தி பெறுகிறேன், உண்மையாகவே, சந்தோஷமும் கொள்கிறேன். இன்று கோபமும் ஏமாற்றமும் கொண்ட நிலையில், துரோகி என்றும் சுயநலக்காரனென்றும் தூற்றினாலும், பற்றும் பாசமும் காட்டியிருக்கிறார் முன்பெல்லாம் என்பதை எண்ணும்போது, சந்தோஷமே உண்டாகிறது.

அதுபோலவே உங்கள் ஒவ்வொருவருக்கும் அனுபவம் இருக்கும்—ஏனெனில், அவர், அவ்வளவு பெருமையுடன், நம்மைப்பற்றி எல்லாம் பேசிவந்திருக்கிறார். இன்று ஏசுவதை நாம், அதனால்தான் பொருட்படுத்தக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர் எதிர்பாராத நிலைமை ஏற்பட்டுவிட்டது; எனவே, அவர், அவருடைய பண்புக்கு மாறான மொழிகளையும் பேசவேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகியிருக்கிறது. விஷயம் அவ்வளவுதான்! நாம் நமது பணியினைத் தொடர்ந்து நடத்திக் காட்டுவதன் மூலம், நமது நல்லெண்ணத்தை நாடு அறியச் செய்தல் வேண்டும். அதுவே நமது கடமை. அவருடைய ஆத்திர மொழி கேட்டு நாமும் ஆத்திரம் கொள்வதோ, ஆயாசப்படுவதோ கூடாது, என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன்.

தந்திரமிக்க பிரசாரம் செய்கிறார்கள், அவருடைய ஆதரவாளர்கள். நமது ஒத்துழைப்பும், கூட்டுப் பணியும் திராவிடர்கழகத்துக்கு இனி இல்லை என்பது தான், நாம் இப்போது அமைத்துக் கொண்டுள்ள புதிய கழகம், எடுத்துக்காட்டும் நோக்கம். பெரியார் உலவவே மாட்டார்—கூட்டமே நடைபெறாது—எங்கும் எவரும் அவருடன் சேரவே மாட்டார்கள், என்று கூறிடும் அளவுக்கு, பித்தம், நமக்கு இல்லை. முப்ப[...] தாண்டுச் சுயமரியாதைப் பிரசாரத்துக்குப் பிறகும் கிருபானந்தவாரிகள் அங்கோர் இடம் இங்கோர் இ[...] சென்று புராணம் பேசித்தானே வருகிறார்கள்! ந[...] முடன் இருந்துவந்த நண்பர் கே. எம். பாலசுப்பி[...] மணியம், இங்கர்சாலை மறந்துவிட்டு, மணிவாசகரைப் பற்றிக்கொண்டு, சைவம் பேசிக்கொண்டுதானே இரு[...] கிறார், 6-ந் தேதி ஆடுதுறை, 7-ந் தேதி பாபநாசம் 8-ந் தேதி கோட்டையூர் என்றவிதமாக! அவர்களெல்லாமே, இவ்வளவு சாத்யமாகிறபோது, முப்ப[...] தாண்டுகளாகப் பொதுப் பணி புரிந்தவரும், அவ[...] கூறுகிறபடி, முழுநேரமும் அதே தொண்டு செ[...] பவரும், நம் போன்றார்களை எல்லாம் முன்னே[...] பிள்ளைகளாகவும் முரசு கொட்டுவோராகவும் பெற்று[...] பத்திரிகை பலம், பணபலம்,நட்புப்பலம் ஆகியவற்றிலே இயக்கத்திலே மற்ற எவருக்கும் இல்லாத அளவு வச[...] கள் கொண்டிருப்பவருமான, ஒரு தலைவருக்கு, நா[...] டிலே பிரச்சாரம் செய்கிற வாய்ப்புக் கிடைத்திரு[...] பதா, அதிசயிக்கத்தக்கது!! அவரை ஆதரிப்பதாக கூறிக்கொண்டு அவருடைய சுற்றுப் பயணத்தை சுட்டிக் காட்டி, பார்! பார்! என்ன ஜோர் பார்! என் பாடுகிறார்களே, இது உண்மையிலே அவரைப் பெ[...] மைப்படுத்தும் முறைதானா! எண்ணிப் பார்க்கவேண்டும், எக்களிக்கும் தோழர்கள். அவர் எவ்வளவு ம[...] தான காரியங்களைச் சாதிக்க வேண்டியவர்! அவர் மு[...] பிரச்னைகள், எவ்வளவு உள்ளன! நமது தலைமுறையிலே தீர்க்கப்பட்டு விடக்கூடும் என்று எண்ணக் கூடியவிதமாக, உருவெடுத்துள்ள பார்ப்பனர்—அல்[...] தார் பிரச்னையைக் கவனித்து, ஒரு ஒழுங்கான முடி[...] காணவேண்டிய நேரம்! ஆந்திரத் தலைவர்கள், கோ[...]

# ஆற்றல் தூற்றலுக்கா பயன்பட வேண்டும்?

தலைவர்கள், கர்நாடக அமைப்பினர் ஆகியோரைக் கலந்து பேசி, திராவிடக் கூட்டாட்சி பற்றித் திட்டம் வகுக்கவேண்டிய காலம்! சிலோனில்சீரழிவுக்கு ஆளாகி வரும் தமிழருக்கு, ஒரு நல்ல மார்க்கம் காட்ட, சிலோன் அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேச வேண்டிய நேரம்' எவ்வளவு பிரம்மாண்டமான பிரச்னைகள், உள்ளன! இவ்வளவையும் மறந்து, என்னை எதிர்ப்பவரை ஒழித்துக் கட்டும் ஆற்றல் எனக்குண்டு, அதற்கு ஆதரவு தரும் அன்பர்கள் சிலர் உண்டு, என்று ஆரூரிலும் அதை அடுத்துள்ள இடங்களிலும் பேசுவதா, நாம், இவ்வளவு பெரிய தலைவரிடம், எதிர்பார்க்கும் காரியம்! இவருடைய ஆற்றலும் இவருக்குக் கிடைக்கும் ஆதரவும், என்னை ஒழிக்கவும், என்னுடன் சேரத் துணிந்தவர்களை ஏசவும்தானா, பயன்பட வேண்டும்! ஆச்சாரியாரின் வர்ணாஸ்ரமப் பிரசாரத்தை அடக்க, படேலின் பாசிசப் போக்கை ஒடுக்க, வடநாட்டு ஏகாதிபத்ய வாதிகளின் இறுமாப்பை முறியடிக்க, இவைகளுக்குப் பயன்படுத்தவேண்டிய ஆற்றல்! பல ஆண்டுகளாக, பட்டி தொட்டி என்று பாராமல், பகல் இரவென்று எண்ணாமல், ஓயாது பயணம் செய்து, செய்து, அவர்பெற்றுள்ள ஆற்றல், கடைசியில், என்னை ஒழிப்பதற்குப் போதுமானதாக இருக்கிறதா என்று பரீட்சை பார்க்கத்தானா பயன்படவேணடும்!! எனக்கே, கஷ்டமாகத்தான் இருக்கிறது, அவருடைய இன்றைய போக்கைக் காண. களம் சென்று பயன்படவேண்டிய வாளைத், தீட்டித்தீட்டிப்பார்த்துவிட்டு, வீட்டுத்தோட்டத்திலே வளர்ந்துவரும் வாழையை வெட்டுவதற்குப் பயன்படுத்துகிறது போலிருக்கிறது இந்தப் போக்கு. வேண்டாம், இந்தப் போக்கு—தங்கள் நோக்கம் சாமான்யர்களான, எம்மீது இருத்தலாகாது, சர்தார் படேல், பண்டிதநேரு, ஆச்சாரியார், பஜாஜ் பிர்லா, சங்கரர் தம்பிரான், அடக்குமுறைச்சட்டம், ஆட்சியாளரின் புதுப்புதுத் திட்டம் ஆகியவற்றின்மீது பாய வேண்டும், தங்கள் ஆற்றல், அதற்காகத்தான் இருப்பது, என்பதைப் பெரியாருக்குக் கவனப் படுத்துகிறேன்.

அவருடைய 'நிலை' மாகாணத்துக்குள்ள தலைவர் என்ற அளவிலே, அதிலும், மாற்றார் மத்தியிலே நடமாடும் அளவிலே இருப்பதற்குக் காரணமே, இந்தப் போக்குதான்—அதாவது, அவர் அடிக்கடி தம்முடைய ஆற்றலை, என்போன்றோர் மீது வீசிவீசி, வீணான அலுப்பை வருவித்துக் கொண்டதுதான். அந்தச் சம்பவங்களை எல்லாம் அவர், 'வெற்றிகள்' என்று இன்றும் கருதுகிறார். அல்ல! அல்ல! ஆற்றலைப் பாழ்படுத்திக் கொண்ட முறைகள் அவை! அலசிப்பார்ப்போர், இதனை நன்கு அறியமுடியும். கழகத்திலே ஜனநாயகம் அரும்பவிடக்கூடாது என்பதற்கே, அடிக்கடி தமது ஆற்றலைப் பயன்படுத்தி வந்திருக்கிறார். அவன் எதிர்த்தான், என்ன ஆனான்? இவன் எதிர்த்தான், என்ன ஆனான்? என்ற கேள்விகளைக் கேட்டுக் கேட்டுப் பூரிப்படைவதிலேயே, பல ஆண்டுகளையும், சேகரிக்கப்பட்ட ஆற்றலையும், பயன்படுத்திக் கொண்டு வந்திருக்கிறார்! எதற்குப் பயன்பட்டது, கடைசியில் அந்த ஆற்றல்? என்சொல்லைக் கேளாதவனை ஒழித்துக்கட்டும் சக்தி எனக்குண்டு, என்று கூறிப் பூரிப்படைவதிலேதானே! எழுபதாண்டைக் கடந்தவர், எந்தத்தலைவரும் வேலை செய்திராத அளவுக்குப் பிரசாரவேலை செய்துவந்தவர், எந்தத் தலைவருக்கும் கிடைத்திராத முறையிலே, கூட்டுத் தோழர்களைப் பெற்றவர், என்ன கூறிக்களிப்படைகிறார்? என்னுடைய ராஜ்யத்திலே நானே சர்வாதிகாரி—என்று! இவ்வளவுதானா! இதற்குத்தானா, அவ்வளவு ஆற்றலும் பயன்படவேண்டும்!

கழகத்திலே யார் தலைதூக்குகிறார்கள், யார் என்னவிதமாக வளருகிறார்கள், என்ற இந்தக் காட்சியைக் கவனித்துக் கொண்டிருக்கவே, கால முழுவதையும், ஆற்றல் அவ்வளவையும் செலவிட்டுக் கொண்டிருந்தால், பிரம்மாண்டமான பிரச்னைகளைக் கவனிக்க நேரம் ஏது, நினைப்பு எப்படி உண்டாகும்? சிற்றரசு என்ன செய்கிறார், மதியழகன் எங்கே பேசினார், கருணாநிதியை ஏன் கூப்பிட்டார்கள், அண்ணாத்துரையை ஏன் ஆதரிக்கிறார்கள், லிங்கம் எப்படி இன்டர் வகுப்பில் செல்ல முடிந்தது, மணிமொழியாருக்குப் பேப்பர் எப்படிக் கிடைத்தது, மாதர் மாநாட்டை ஏன் கூட்டினார்கள், குறள் விற்றவர்கள் எவ்வளவு இலாபமடைந்தார்கள், என்ற இத்தகைய பிரச்னைகளையே, பெரிய பெரிய பிரச்னைகளாகக் கொண்டு, சிந்தனையையும் திறமையையும் இவைகளுக்காகவே செலவிட்டுக் கொண்டிருந்தால், ஒரு பெரியதலைவர் இயற்கையாகக் கவனிக்க வேண்டிய, ஒரு பெரிய தலைவர் மட்டுமே கவனிக்கக்கூடிய பெரிய பிரச்னைகள் என்ன கதியாவது? இந்தச் சில்லறைகளிலேயே, திறமை அவ்வளவையும் பாழ்படுத்தினதால்தான், இவ்வளவு ஆற்றல் இருந்தும், திராவிடம விடுபடவில்லை. இந்தப் பெரு நஷ்டத்தைக் கவனிக்காமல், பெரியாரும் அவருடைய ஆதரவாளர்களும், பெரியார் பெற்ற வெற்றிகள் என்று, கழகத்திலே இருந்த சிலபலரை வீழ்த்திய சம்பவங்களைப் பெருமையுடனும் பூரிப்புடனும் பேசிக் கொள்கிறார்கள். பெரியாரின் ஆற்றலுக்கும் அனுபவத்துக்கும், உழைப்புக்கும் வசதிக்கும், இந்தச் சில்லறை விஷயங்கள் எல்லாமா பிரச்னைகளாகக் கண்களில் படுவது! அதோ நேருவும் ட்ரூமனும், கலந்து பேசுகிறார்கள், உலக நிலைபற்றி! மாஸ்கோ தயாராகிறது, லியாகத் அலிகானை வரவேற்க! மாசேதுங், சீனாவை, ஆசியாவின் சமதர்மக் கோட்டையாக்கும் காரியத்தில் ஈடுபட்டு வருகிறார்! இந்திய துணைக் கண்டத்துக்கு இரும்புப் பிடிபோன்றதோர் அரசியலைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள்! இவைகளெல்லாமல்லவா, பெரியாரின் கண்களிலே தென்படவேண்டியவைகள்! மினிட்ஸ் புத்தகத்தைத் தூக்கிக்கொண்டு போய் விட்டார்களாம், மேஜை நாற்காலியை ஆக்ரமித்துக் கொண்டார்களாம், கொடியை இறக்கினார்களாம்—என்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து கொண்டிருக்கிறாரே! ஆற்றலுக் கேற்ற காரியமா? திராவிடம் பிரிவதற்கு இன்னின்ன வழிகள் உள்ளன—புதிய அரசியல், சட்டமாகி விட்டால் இன்னின்ன புதிய சங்கடங்கள் விளையும், அப்போது திராவிடநாட்டுப் பிரிவினைப் பிரச்னை என்பதுபற்றி புதிய வகையிலேயே கவனிக்கவேண்டி நேரிடக்கூடும், திராவிடம் தனிஅரசு ஆனால், இன்னவிதமான முறைகள் இருக்கும், தொழில் திட்டம் இப்படி இருக்கும், கல்வித் திட்டம் இவ்விதம் இருக்கும், என்ற இன்னோரன்ன பிரச்னைகளைப் பற்றித் திட்டம் தீட்டி, விளக்கிக் காட்டி, ஆதரவு தேடவேண்டியதற்குப் பயன்பட வேண்டிய ஆற்றல், திருமண நோக்கம், விளக்கம், எதிரிகள் சூழ்ச்சி திட்டம், என்பவைகளைப் பற்றி, சொன்ன

# தானே செய்யவேண்டும் என்ற போக்குக்கூடாது

தையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கத் தானு பயன்படவேண்டும்?

கடற்படையின்றி, திராவிடம் தனியாக இருக்க முடியுமா? என்று ஓமந்தூர் ரெட்டியார் கேட்கிருர். இந்தியாவின் 'ஐக்யம்' பாழாக்கப்படுவது பயங்கரமான விளைவைத் தருமே என்று காமராஜர் கேட்கிருர். திராவிடநாடு பிரிவினை என்ருல் என்ன பொருள்? என்று படேல் பேசுகிருர். வடநாடு தென்னுடு என்ற பேதப் பேச்சு பெரும் ஆபத்து என்று வடவர் பேசுகின்றனர். திராவிடத்துக்கும், பிரியப் போகும் ஆந்திரம், கேரளம் ஆகியவற்றுக்கும், என்ன தொடர்பு எப்படி ஏற்படுத்தமுடியும் என்று தமிழரசினர் கேட்கின்றனர். எங்களைக் கேரளப் பிடியிலிருந்து விடுவியுங்கள் என்று நாஞ்சில் நாட்டுத் தமிழர்கள் கூறுகின்றனர். சிங்கள மந்திரிகள் படுத்துகிற பாடு கொஞ்சமல்ல என்று, சிலோன் வாழ் தமிழர்கள் கதறுகின்றனர். இவைகளைக் கவனித்து, பரிகாரம் கண்டறிந்து, பக்குவம் கண்டறிந்து, அந்தந்தப் பிரச்னைகளுக்குரிய தலைவர்களுடன் கலந்து பேசிக் காரியமாற்ற வேண்டியவர், என்ன செய்கிருர் தமது நிலைமையையும் வசதியையும் ஆற்றலையும் கொண்டு! "உங்கள் ஊரிலே ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யுங்கள்—இன்னின்னவருடன் கலந்து பேசிக் கையொப்பம் வாங்குங்கள் — திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்துவிட்டால், நீங்கள் உடனே அது செல்லுபடியாகாது என்று மறுப்பறிக்கை விடுங்கள்" என்ற இவ்விதமான 'ராஜதந்திரக்' காரியங்களிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிருர்! நான் உண்மையிலேயே, அவருக்குள்ள அளவு ஆற்றல்பெற்றவன் என்று என்னைக் கருதிக்கொள்ளும் ஏமாளியல்ல. ஒவ்வொரு முக்கியமானஊருக்கும் அவர் ஒருபத்துத்தடவை போய் வந்திருப்பார் பிரசாரத்துக்கு, நான், போகாதஊர்களே அதிகம்—அவருக்கு ஏற்பட்டிருக்கும் அளவு தொடர்பும், நண்பர்களும், எனக்கு இருக்க நியாயமில்லை. எனினும் கூட நான் என் அளவிலே, பல காரியங்களை என் நண்பர்களிடம் ஒப்படைத்துவிட்டு, அவர்களைச் செய்யச் சொல்கிறேன்—நம்பிக்கையுடன்—பெரியாருக்கு, இன்றளவுக்கும் அந்த நம்பிக்கை வரவில்லையே எதிலும், யாரிடமும்—கேட்பவர் உள்ளம் புண்படுமே என்று கூடக் கவலைப்படாமல், கூறுகிருரே, நான் எதையும் நானே செய்யவேண்டும் என்று எண்ணுகிறேன்—யாரையும் நம்புவதற்கில்லை— என்று. எவ்வளவு சந்தேகம்! எத்துணை பயம்! ஏன் இந்த நிலை? காஷ்மீரில் போர்வாடை, திபெத்தில் கலகம், பர்மாவில் போர், பாகிஸ்தானுடன் பகை உணர்ச்சி, இப்படிப்பட்ட நெருக்கடி சூழ்ந்த நேரம்தான், என்றபோதிலும் பண்டித நேரு, அமெரிக்கா சென்றிருக்கிருரே, ஒரு திங்கள் ஆகுமே திரும்ப—நாம்இல்லையே, நாடுஎன்ன ஆகுமோ, யாரை நம்பி இவ்வளவு பெரிய பொறுப்பை ஒப்புவித்துவிட்டுப் போவது என்ரு எண்ணினர். நாம் செய்யும் காரியத்தைப் படேல் பார்த்துக்கொள்வார், மத்தாய் கவனித்துக்கொள்வார், என்ற நம்பிக்கை இருக்கிறதே! நமது பெரியாரிடம், இந்த நம்பிக்கை துளியும் கிடையாதே, ஒரு சம்பவம் நினைவிற்கு வருகிறது. மாவூரில் நடைபெற்றதே திராவிட மாணவர் பயிற்சிப்பள்ளி—அதற்கான அறிவிப்பு, விடுதலையில் வந்தது இரண்டோர் முறை. அது சமயம், உடுமலை வழக்குக் கிளம்பிற்று. உடனே ஒருஅறிக்கை, பெரியார் ஒருசமயம் சிறை செல்லக்கூடுமாகையால், மாணவர்பயிற்சிப்பள்ளிநடத்துவதைத் தள்ளிவைத்திருக்கிறேம், என்று வெளிவந்தது. என்னமனப்பான்மை இது? மாணவர் பிரச்சாரப்பயிற்சி, வேறு, எவரிடமும் நம்பி ஒப்படைக்க முடியாது. எவ்வளவு வளமான மனப்போக்கு! நேரு நினைக்கவில்லையே இதுபோல! நமது பெரியார் மட்டுந்தானே இதுபோல எண்ணுகிருர். இப்படிச் சிந்தனையில் சதா அவநம்பிக்கையும் சந்தேகமும் பயமும்கொண்டுவிட்டதாலேதான் சுலபத்திலே அவரால், என்போன்றவர்களைக்கூட, அதாவது அவர் எதிரே உரத்த குரலில்கூடப் பேசியறியாதவர்களைக்கூட 'துரோகி' என்று எண்ணவும் கூறவும் முடிகிறது. ஒருகுறிப்பிட்ட அனுபவம், வயதுக்குப் பிறகும், எல்லா அலுவலையும் தாமே கவனிக்கவேண்டும் என்ற எண்ணமும், அலுவல் எதனையும் எவரும் செய்யாமலிருக்வேண்டும் என்ற எண்ணமும், இருத்தலாகாது. வேறு பலரைத்தயாரித்துவிடும் போக்கும்,அவர்களைக்கொண்டு காரியமாற்றச் செய்து, மேற்பார்வை பார்த்துமகிழும் மனப்போக்கும் வளரவேண்டும். அது வளராவிட்டால், உள்ளம், சந்தேகச்சாவடியாகித்தான் தீரும். அதன்விளைவாகவே அவர் நம்மை எல்லாம் நிந்திக்கிருர். இதனை ஆராய்ந்தறிந்து, கொள்ளும்படி உங்களைக்கேட்டுக்கொள்கிறேன். நாம், அவர்போலன்றி, ஒருவரை ஒருவர் நம்பிவாழ்வோம். அனைவருக்கும்ஒவ்வோர் காரியமாற்றும் ஆற்றல் உண்டுஎன்ற அடிப்படை உண்மையை அறிந்து நடந்துகொள்வோம். தனி ஒருவரின் ஆற்றலைவிட, பலருடைய கூட்டுச்சக்தி, சிலாக்கியமானது என்ற கொள்கையைப்போற்றி வளர்ப்போம். எல்லா அதிகாரமும் ஒரேஇடத்தில் ஒரேகரத்திலிருந்தால்தான் காரியம் சரியாக நடைபெறும் என்ற எண்ணம், அவருக்கு இனிக்கட்டும். நமக்கு, ஒவ்வொருவருக்கும், பணியில் பொறுப்பும் பங்கும் உண்டு. சிந்தனைக்கு வேலை உண்டு, கலந்துபேசியே முடிவு செய்யவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அதாவது, ஜனநாயகத்திலே நாம் முழுநம்பிக்கைகொண்டு பணியாற்றி வருவோம். சில்லறைச் சச்சரவுகள், பிரச்னைகள் ஆகியவற்றினை கவனிக்க மறுக்கவேண்டும், நாட்டுக்குத்தேவையான நற்பணிபுரிவதை நோக்கமாகக் கொண்டு, சந்தேகிக்கப்பட்டால் சிரித்துவிட்டு, தூற்றப்பட்டால் தாங்கிக்கொண்டு, துயரம் வந்தால் சகித்துக்கொண்டு, அடித்தால் பட்டுக்கொண்டு அமைதியுடன் ஆனால் ஆர்வத்துடன், பணிபுரிந்து வருவோம் வாரீர் என்று அழைக்கிறேன். பணிபுரிந்து பழக்கப்பட்ட தோழர்கள் பல்லாயிரவர் உள்ளனர் நம் பாசறையில். பழிச்சொல், நம்மை அழித்துவிடாது, இழிமொழிபேசி, நமது முயற்சியைக்குலைத்துவிட முடியாது. இன்றைய பிரச்னைக்காக, நேற்றுஇருந்துவந்த நேசத்தை மறந்துவிடும், மனமாசு நமக்கு வேண்டாம் — துளியும் வேண்டாம். குரோதம் எனும் குதிரைபூட்டி, வெற்றி இரதத்தைச் செலுத்தமுடியாது—ஆர்வம் எனும் புரவிகள், அவைகளுக்கு, நல்லெண்ணம், சகிப்புத்தன்மை எனும் கடிவாளமிட்டு, பண்பு எனும் பாதையிலே, திராவிட முன்னேற்றக்கழகமெனும் தேரினை ஓட்டிச்செல்வோம் வாரீர், என்று அழைக்கிறேன்—உங்கள் ஆர்வமும் ஆற்றலும் நான் நன்கு அறிந்திருக்கிற காரணத்தால்.

அண்ணாதுரை.

# மதிப்புக் குறைப்பு

[இரகுபதி, அண்ணாமலை பல்கலைக்கழகப் பொருளாதார மாணவன்.]

"மதிப்புக் குறைப்பு" என்றவுடன் எதன்மதிப்பு? எதனால்குறைக்கப் பட்டது என்ற வினாக்கள் எழுவது இயற்கை. இந்தியாவைப்பற்றித் தான்குறைவாகக்கூறுகிறேன் என்று, ஒரு சிலருக்கு ஆத்திரம் தோன்றும். அதன் விளைவாய், "கசடனே! இந்தியாவின் மதிப்பு மற்ற நாடுகள் உணர வேண்டும் என்ற ஆவல் காரணமாய் இங்கிலாந்தில்உள்ள இந்திய தூதுவர் தங்குவதற்குப் பலகோடி பணச்செலவில் மனதைக் கவரும் மாளிகையைப் பார், அதுவும் போதவில்லையாயின், இந்தியா ஏழ்மை நாடு என்று நினைக்காதீர்கள் என்பதற்கு அத்தாட்சியாகக் கவர்னர் ஜெனரலின் சம்பளத்தை பார், அல்லது நம் தூதுவர்கள் அயல் நாட்டில் தட்டுமுட்டு சாமான்களுக்காக சிக்கனமாகச் செலவழிக்கும் சில பல லட்சங்களைப் பார், பார்த்துக் கூறு பிறகு, இந்தியாவின் மதிப்பா குறைந்துவிட்ட" தென்று கூறிடத் தோன்றும் சில முன்கோபிகளுக்கு. அத்தகைய முன்கோபிகளுக்கு ஆறுதலாக, "மதிப்புக்குறைப்பு" என்றுகூறியது இந்திய ரூபாயின் மதிப்புக் குறைப்பைப் பற்றியே என்று கூறிவிடுவது நல்லது.

செப்டம்பர் 19-க்கு மேல் செய்தித்தாள்களில், ஏன்? உலகில், எத்திசை நோக்கினும் கேட்ட ஒலி "மதிப்புக்குறைப்பு" (Devaluation) என்பதாகும். தற்குறிகள் நிறையப் பெற்ற நம் நாட்டிலே பெரும் திகைப்பை உண்டாக்கியது இந்நிகழ்ச்சி. பாமரர் படித்தவர்களை அணுகினர், படிக்காத பெற்றோர்கள் படித்த தம் பிள்ளைகளை அணுகினர் இந்நிகழ்ச்சியைப்பற்றி விளக்கம் கேட்க.

சில திங்களுக்கு முன்னர், பொதுஉறவு நாட்டு நிதி அமைச்சர்கள் (Commonwealth Finance ministers) ஒன்று கூடி டாலர் சர்ச்சை (Dollar Crisis) பற்றிப் பேசினர் லண்டன் மாநகரிலே. டாலர் பொதுஉறவு நாடுகள் அடையும் விதம், டாலர் பிரதேசத்திலிருந்து இறக்குமதியைக் குறைக்க முயலுதல், டாலர் பிரதேசத்திற்கு ஏற்றுமதியை அதிகரித்தல் என்ற தீர்மானங்கள் உருவாயின. டாலரைப் பெருவாரியாக அடைவதற்காகப் பொதுஉறவுநாடுகள் தங்கள்நாட்டுநாணயத்தின் மதிப்பைக் குறைத்தல் என்ற பிரச்சனை எழவேயில்லை என்பதை நம் நிதி அமைச்சர் டாக்டர் மத்தாய் ஒப்புக்கொள்கின்றார். ஆனால் அமெரிக்காவில், இங்கிலாந்தின் நிதி மந்திரி அமெரிக்க நிதி அமைச்சருடன் கூடிப் பேசினார். அவ்வமயம் பொதுஉறவு மாநாட்டு மந்திரிகள் அழைக்கப்படவுமில்லை, அமெரிக்க நிதி அமைச்சருடன் கூடிப் பேசுவதற்கு முன்னர் பொதுஉறவு மாநாட்டுநிதி அமைச்சர்களின் ஆலோசனையையோ கருத்தையோ இங்கிலாந்தின் நிதி அமைச்சர் கேட்கவுமில்லை. ஆனால், தன் இச்சைபோல ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் ஸ்டர்லிங்கின் (Sterling) மதிப்பை 30. 5 % குறைத்துவிட்டேன் என்று கூறிவிட்டார், தன் செய்கை எவ்வாறு பிறநாடுகளை, குறிப்பாகப் பொதுஉறவு நாடுகளைப் பாதிக்கும் என்பதை உணராமல்.

இதன் விளைவாகத்தான் இந்தியாவும் தன்ரூபாயின்மதிப்பைக்குறைக்கும்படிநேரிட்டது. அதாவது, முன்பு டாலர் நாடாகிய அமெரிக்காவில் 1 டாலர் மதிப்புள்ள பொருள்பெற வேண்டுமாயின் ரூ. 3. 309 கொடுக்க வேண்டும். ஆனால், இப்பொழுது இந்த ரூபாயின் மதிப்புக் குறைக்கப் பட்டுவிட்டதால் அதே 1 டாலர் மதிப்புள்ள பொருளைப்பெற ரூ. 4. 76 கொடுக்கவேண்டும். இச்செய்கையால் ஏற்படும் மிகவெளிப்படையான இன்னல் யாதெனில், நாம் டாலர் பிரதேசத்திலிருந்து இறக்குமதியாக்கும் பொருளுக்கு இப்பொழுது அதிகப்பொருள் கொடுத்து வாங்கவேண்டியிருக்கும். மேலும் தங்கள் நாணயத்தின் மதிப்பைக் குறைத்துக்கொள்ளாத பாகிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கும் அதிக பொருள்கள் கொடுக்கநேரிடும். ஸ்டர்லிங் பிரதேசநாடாகிய இங்கிலாந்திலிருந்து இறக்குமதியாக்கும் பொருள்கள் விலைபாதிக்காது. ஆனால் இங்கிலாந்திலிருந்து இறக்குமதியாக்கப்பட்ட பொருள் டாலர் பிரதேசமாகிய அமெரிக்காவின் இறக்குமதித் தளவாடங்கள்மூலம் செய்யப்பட்டதாயிருக்குமாயின், இயற்கையிலேயே அப்பொருள்களின் விலை மிக அதிகமாயிருக்கும். ஆனால், நம் பொருள்கள் அமெரிக்க மார்க்கெட்டில் முன்பைவிட மலிவாகக் கிடைக்கும். இதனால் டாலர் வேண்டிநிற்கும் நாடுகள் தங்கள் ஏற்றுமதியை அமெரிக்காவிற்கு அதிகரித்து, அதன்மூலம் அதிக டாலர் பெறவேண்டும் என்பதே. (The whole purpose of devaluation was to stimulate exports to the united States and whereby increase the dollar resources of the area.)

தொழில்வளம் ஓங்கிநிற்கும் நாடான இங்கிலாந்திற்கு இந்நடவடிக்கை பயன் அளிக்கக்கூடியதேயாகும். ஏனெனில், இங்கிலாந்து, அமெரிக்காவிடமிருந்து தன்னுடைய தொழில் வளர்ச்சிக்கான தளவாடங்களைப் பெற்று அமெரிக்காவைவிட மலிவாக(Manufacturedgoods) ஆக்கப்பொருள்களை விற்க முயற்சிக்கும்—வெற்றியும் பெறலாம். ஆனால், இந்தியாவில் அதுமுடியுமா என்பது ஐயப்பாட்டிற்குரியதே. காரணம், இந்தியா ஓர் விவசாயநாடு. அது அமெரிக்காவிடமிருந்து பெறும் பொருள்கள்யாவும், விவசாயத்தைப் பெருக்குவதற்காகவும், குடிசைத் தொழிலைச் செழிக்கச்செய்வதற்காகவுமே இருக்கும். ஆகையால் நாமும் இங்கிலாந்தைப்போல் பயன் பெறுவோம் என்பது கற்பனையேயாகும். "இச்செய்கையில் நான் தத்வார்த்தமாக எது சரியெனப்பட்டதோ அதைச் செய்யாமல், உலக நிகழ்ச்சியின் விளைவால் கட்டாயப்படுத்தப்பட்டேன்" (I feel that in this matter I have had to act not on conviction born of logic necessarily but so as to speak, by the compulsion of event) என்ற நம் நிதி அமைச்சரின் கூற்று நமக்கு ஆச்சரியத்தை அளிக்கிறது. ஏனென்றால், தான் இச்செயல்புரிந்ததற்குகாரணம்கூறப் புகுந்த நிதி அமைச்சர் "By the

"Compulsion of event" என்று கூறியவார்த்தைகள் அவர் இச்செய்கையைக் கனவிலும் கருதவில்லை என்பதை நன்கு புலப்படுத்துகின்றன.

எந்திரங்கள், போக்குவரத்து சாமான்கள் ஆகியவற்றுடன் உணவுப் பொருளையும் ஆடம்பரப் பொருள்களையும் (Luxurious Commdities) நாம் அமெரிக்காவிலிருந்து பெறுகின்றோம். நாம் இவ்வாண்டிற்குத் தேவையான உணவுப் பொருள்களைப் பெற்றுவிட்டோம். ஆகையால், உணவுப் பொருள்களைப் பொறுத்த வரையில் நம் செலவு இவ்வாண்டில் பாதிக்கப்படும் என்று கூற முடியாது. நாம் அமெரிக்காவிற்கு அனுப்பும் பொருள்கள் பெரும்பாலானவை கச்சாப் பொருள்களே. நாம் அனுப்பும் கச்சாப் பொருள்களான எண்ணெய் வித்துக்கள், மணிலா போன்றவை வெளிநாடுகளுக்குச் சென்று ஆடம்பரப் பொருள்களாகத் திரும்பி வருகின்றன. அவைகளுக்கு நாம் மிக விலைகொடுக்க வேண்டி நேரிடுகிறது. இதைத் தடுப்பதற்கு ஒன்று ஆடம்பரப் பொருள்களின் இறக்குமதியைகுறைக்கவேண்டும். இன்றேல் நாமே நமது கச்சாப் பொருளிலிருந்து ஆடம்பரப் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும். இதன் மூலம் நாம் டாலர் செலவைக் குறைப்பதோடு,டாலரையும்அடைய முடியும். நம் நாட்டில் தேயிலை, காப்பியைவிட அதிகமாக உற்பத்தியாகிறது. ஆனால் காப்பி வெளி நாட்டிலிருந்துஇறக்குமதி செய்யப்படுகிறது. இதனைக் குறைக்க வேண்டியது மிக இன்றியமையாததாகும். இதனால்தான் நாம் குறைந்த விலைக்கு ஏற்றுமதி செய்யும் தேயிலையை நம் நாட்டிலே உபயோகிக்க முடியும் என்றும் தேயிலையின் உபயோகம் அதிகரிக்கும் என்றும், காபிக்காக நாம் கொடுக்கவேண்டிய டாலரும் குறையும் என்றும் கூறுகின்றோம். இது மக்களுடைய மனமாற்றத்தைப் பொறுத்துள்ளது.

டாலர் நாடாகிய அமெரிக்காவிலிருந்து மக்களை நம் நாட்டிற்கு உல்லாசப் பிரயாணிகளாக வரும்படி செய்தல், நம் நாட்டுநூல்களைப்பெருவாரியாக டாலர் பிரதேசத்திற்கு அனுப்பிவிற்பனை செய்தல், உயர்ந்த சினிமாப்படங்களை அனுப்புதல் முதலியவைகள் மூலம் டாலர் வருவாய் அடைய முடியும் என்று கூறப்படுகிறது. நம் நாட்டிலிருந்து அனுப்பும் பெருவாரியான மாணவர்களை டாலர் பிரதேசத்திற்குப் படிக்கஅனுப்பாதிருந்தால்நாம்டாலர் செலவைச்சிறிது குறைக்க முடியும்.

டாலர் பிரதேசத்திலிருந்து நம் நாட்டிற்குப் பிரயாணிகள் வரச்செய்யுமுன், நம் நாட்டு மாஜி மன்னர்களும்மன்னர்களெனப் பெயரளவில் இருப்பவர்களும் டாலர் பிரதேசங்களில் செலவழிக்கும் பொருளை முதலில் குறைக்க வேண்டும்.

இரண்டாவதாக, நாம் இங்கிருந்து அனுப்பும் நூல்கள் புராண இதிகாசங்களாய், பகுத்தறிவைப் பாழ்படுத்துவதாய் இருந்தால், பகுத்தறிவு வாதி இங்கர்சால் தோன்றிய நாடு அவற்றை ஏற்காதே! அடிமைத் தன்மையை உண்டாக்கும் புராணங்களை, அடிமை கூடாதென்று முழக்கமிட்ட ஆப்ரகாம் லிங்கன் உதித்த நாடு வரவேற்காதே! அப்படி அனுப்பப்படின் நம் நூல்கள் மார்க்கெட்டில் முடங்கிக் கிடக்கும். அப்படி ஒன்றிரண்டு நூல்கள் விற்பனையானாலும், அவைகள் நம்மை எள்ளி நகையாடுதற்குப் பயன்படும். அல்லது இன்னொரு மேயோவை உருவாக்கும்.

ஆகவே வெளி நாட்டிற்கு நாம் அனுப்பும் நூல்கள் நல்ல பகுத்தறிவு நூல்களாய், ஆராய்ச்சித் திறம் வாய்ந்தனவாய் இருத்தல்வேண்டும். ஆனால் நம் அரசாங்கம்தான் அத்தகைய நூல்களைப் பறிமுதல் செய்யப் புகுந்துள்ளதே!

சினிமாப் படங்களை டாலர் பிரதேசத்திற்கு அனுப்பினால் டாலரைப் பெருவாரியாக நாம் அடையலாம் என்று கூறுகின்றனர். ஆனால் நம் சினிமாப் படங்கள்தான் புராணப் படங்களாய் கருத்தையும், சிந்தனையையும் சேர்த்து கருக்கலைக்கும் தன்மையுள்ளதாய்இருக்கின்றனவே! இந்நிலைமை மாறவேண்டாமா, நம் படங்கள் டாலர் பிரதேசத்திற்கு அனுப்பப்பட வேண்டுமாயின்! ஆனால் அந்நாள், எந்நாளோ!

---

4-ம் பக்கத்தொடர்ச்சி

மாகப் பேசினால்தான் ஓரளவுக்காவது, மக்களின் ஆத்திரம் அடங்கும் என்று உணர்ந்து, அதன்படி
பேசிவருகிறார்கள். அது
வேண்டும்—இது வேண்டும்
என்று அடுக்கடுக்காகக் கேட்
டீர்களே! பணம்கொடுத்தால்தான்
நீங்கள் கேட்பனவற்றை நாங்கள்
கொடுக்கமுடியும் என்று அந்தி
கடைப்பேச்சு முறையில் பேசிவரு
றார்கள் மந்திரிகள். அதைச் செய்
வோம் இதைச்செய்வோம் —என்று
அன்று ஆர்ப்பரித்தனரே, அதை
ஏன் இன்று மறந்தார்கள்? அந்த
ஆர்ப்பரிப்பை நம்பித்தானே 'ஓட்'
அளித்தோம்,'ஓட்'பெற்றுக்கொண்
ஓயிலாக பீடமேறியானபிறகு, அ
திக்கடைப்பேச்சுப் பேசுகிறீர்
சரியா, முறையா, என்று மக்கள்கேட்
கின்றனர்! பதுமைகள் கேட்ட
என்று கதை படிக்கிறோம்—இன்
காங்கிரஸ் பக்தர்களே, கேட்கின்
னர், பார்க்கிறோம்.

மந்திரி என்பதை மறந்துபேசின
—என்று புகழ்கிறார் வீரவா
அவர்கள்—உண்மையில், புகழ்ச்சி
காக அந்த வாசகம் பயன்படுவதை
விட, நிலைமையை விளக்கவே அதி
மாகப் பயன்படுகிறது. மந்திரிக
தங்கள் நிலை, தங்களுக்குள்ள அதி
காரம், கடமை, பொதுமக்களிட
முன்பு, வாக்குறுதி அளித்த தன்
ஆகியவற்றை மறந்துதான் பேசு
றார்கள்! மந்திரி என்பதை மற
தான் பேசிக்கொண்டிருக்கிறார்க
வரிகொடு, மேலும் மேலும் கொ
கேட்கும்போதெல்லாம் கொடு,பு
புதிய வரிகொடு—பிறகு பார், பால
பள்ளிக்கூடம், வைத்யவிடுதி, பா
கள், எதுவேண்டுமானாலும், உங்
ளுக்குத் தருகிறோம் என்று பே
வது தன் நிலையை, மந்திரி என்பதை
மறந்துபேசும் பேச்சுத்தான்!! ம
ளின் செல்வநிலையை, நாட்டி
வளத்தை, வரி தவிர வேறு வ
களில் வருமானம் கிடைக்கும் வ
களைக்கண்டறிவதில், மூளைந்து பு
திட்டங்கள் தயாரித்துப் பணியாற்
வதுதான், மந்திரியின் கடமை; ம
ளாட்சியிலே மந்திரியாக வருபவரி
மாண்பு, இதன்மூலம்தான் விள
வேண்டும். இதைக்காணோம் இ
றைய மந்திரிகளிடம், "கொடு வ
கொடு பணம்!! என்று கேட்கு
போக்கே இருந்திடக் காண்கிறோ
உண்மையில் மந்திரி என்ப
மறந்துதான் பேசுகிறார்கள்!!

✱

# ★ கலைமகள் கடாட்சம்! ★

வெள்ளைக் கலையுடுத்தி, வெள் ப் பணிபூண்டுள்ள என் அம்மே! மகளே! உனது கடாட்சத்தா ன்றோ நானொரு கவியானேன் என் ம், காளி தூங்கினவனைத் தட்டி ழுப்பி, நாக்கை நீட்டச்செய்து லத்தால் ஏதோ எழுதிவிட்டுச் ன்றதால் கவிபாடும் திறன் பற்றேனென்றுமே, நமது நாட்டுப் லவர்கள் தமது திறனைப்போற்றி ந்துள்ளனர். காரணம், சாதாரண க்களைவிட ஒருவன், கவிபாடும் றனே, கலையுணரும் பக்குவமோ பற்றால் அது அவனது றிவின் முயற்சியால் வந்த தனக் கூறுவதற்கு மனம் ஒப்புவ ல்லை. அது அருள்! கலைமகள் டாட்சம் என்றே கூறிவந்தனர் து முன்னோர்கள்.

இதைக் கேட்கும் மேனாட்டார் து நாட்டு மக்களுக்கும் கடவுளுக் ம் மிகநெருங்கியநட்பும், அளவற்ற ன்பும் இருந்தது என்றெண்ணி மைப்பற்றி மிகப் பெருமையாகப் சுவர் என்று எண்ணினர் ாலும்.

வெள்ளையன் அங்ஙனம் எண் ன்! கலைமகள் பூஜையில் கருத் தச்செலுத்தும் நம் நாட்டில்தான் குறித் தன்மை அதிகமாக இருக் தென்பதை அவன் அறியானா? நாட்டில்தான் 100-க்கு 10 ருக்கு மேல் படிப்புக்கிடையாதே. களும் காவியங்களும், கட்டுக் தகளும், எதைக் கூறினாலென்ன? ளி விவரம் பேசுகிறது உண் மை!

எனவே இன்று நம் நாட்டிலுள்ள ச்சினை கல்வியை எப்படிப்பரப்பு து? எவ்வளவு விரைவில் பரப்பு து? எந்த விதமான பயனுள்ள வி தேவை? என்பதுதான். நாட் ர தற்குறித் தன்மையை நீக்காது, னவிதமான திட்டங்களை அரசி வாதிகள் ஏட்டில் எழுதிவைத் க்கொள்வதும், எடுத்துக்காட்டி க்குவதும் வீண்.

முடி அரசு இருந்த நாட்களிலா நாட்டிலே தற்குறித் தன்மை இருப்பினும் கவலையில்லை என்றிருக்கலாம். அரசன் முற்று முணர்ந்தவன்—முழு அதிகாரம் கொண்டவன்—கொற்றவனும் கடவுளரும் உறவினர்—ஆண்டவனின் அருள் பெற்றோனே அரசன் — அரசனை எதிர்த்து ஏதொன்றும் செய்ய இயலாது—செங்கோலுக்கு மிஞ்சியது எது—என்று மக்கள் நம்பிவாழ்ந்த காலமது. ஊரை யார் ஆண்டாலென்ன என்றிருந்த காலம். அந்தக் காலத்து மக்களும் மன்னரும், அடிமை ஆண்டையாக இருந்தனர்.

குடிஅரசோ அஃதன்று. நாடாளும் உரிமை நமக்குமுண்டு, அவருக்குமுண்டு எவருக்குமுண்டு என்ற கொள்கையே குடிஅரசு. எனவே, நாடாள யார் வரினும், எது செயினும், மற்றையோர், நமக்கென்ன என்றிருக்க முடியாது— கூடாது. இருப்பரேல், படாதபாடு படவேண்டி நேரிடும்.

சுதந்திரம் — சதா விழிப்பாக இருப்பது எனும் விலை கொடுத்துப் பெறவேண்டிய சரக்கு—என்றார் அறிஞர்.

விழிப்பு என்பது தூங்காதிருக்குந் தன்மையைக் குறிப்பிடுவதல்ல! அறிவைக் குறிப்பிடுவது. அதனால் தான், குடி அரசு ஒரு நாட்டிலே நிலைத்து நின்று நற்பணியாற்ற வேண்டுமாயின் அந்நாட்டிலே கல்வி பரவியிருத்தல் அவசியம். கல்வியில்லா நாட்டிலே குடி அரசு இருப்பது, இடிந்துபோன மாளிகையிலே மறைந்து கிடக்கும் மணிக்கும், துவண்டுபோன செடியிலே தொங்கும் பழத்துக்கும் ஒப்பாகும்.

இன்று நம் நாட்டிலே குடி ஆட்சி நடக்கிறது. மக்கள் மந்திரிகளைச் சமைக்கிறார்கள். மக்களிடம் அரசாளும் ஆயுதமும், அரசாள்வோரை ஆட்டிவைக்கும் ஆயுதமும் இருக்கிறது. ஆனால் அதன் அருமையைத் தெரிந்து, பெருமையை உணர்ந்து, உபயோகிக்க வேண்டுமே. அதற்கு கல்வியின்றி முடியுமா?

எனவே கல்வியைப் பரப்பும் பணியில் சர்க்கார் மிகத் தீவிரமாக இறங்கி வேலை செய்தல் வேண்டும். இல்லையேல் ஆசிரியர் லாஸ்க்கி எனும் அரசியல் அறிஞர் கூறியபடி, தலையிலே வலிப்பும், உடலிலே ரத்த சோகையும் கொண்டவனைப் போல நாடு இருக்கும். இதனைக் கூறுங் காரணம் யாதெனின், படிப்பில்லாமை எனும் பீடை பிடித்துள்ள நம் நாட்டிலேயே, படித்தவர் திண்டாட்டமும் கூடவே இருக்கிறது. இவர்தம் திணறலைக் கண்டவர், உடனே ஒரு தவறான எண்ணங் கொள்ளுகின்றனர். அதாவது, "படிப்பாவது, பாழாவது! படித்துவிட்டுத்தான் திண்டாடுகிறார்களே! இனியும் படிப்பு ஏன்" என்று பேசப் படுகிறது. இது வெறும் திண்ணைப் பேச்சாக மட்டுமே இருப்பின் நாம் கவலை கொள்ளோம். ஆனால் "தலைவர்கள்" என்போரில் பலருங் கூட இப்படிப் பேசுகின்றனர்.

100-க்கு 10-பேருக்கு மேல் படிக்காதுள்ள நாட்டிலே, படிப்பு போதும் என்ற பேச்சுக்கு இடமில்லை. என்றாலும், படித்துவிட்டு வேலையின்றி அவதிப்படுவதும் உண்மையே. அந்தக் கூட்டமே பட்டதாரிகள்!

பட்டம் வாங்கியவர்களை, நாட்டிலே, பல்வேறு வேலைகள் கூவி அழைக்கவில்லை. வேலையில்லாத் திண்டாட்டமே அவர்களை விறைக்க விறைக்கப் பார்க்கிறது.

சர்க்கார்எப்படிக்கவனிக்கப்போகிறார்களோ நாம் அறியோம். ஆனால் இதனைக் கவனிக்காது வளர்த்துக் கொண்டே போவது வம்பைவிலைக்கு வாங்குவதாகும் என்பதை மட்டும் கூற விரும்புகிறோம்.

படித்துப் பட்டம் பெற்று வேலை கிடைக்காது திண்டாடுவோரின் அல்லல் நாட்டைக் குழப்புவதற்குக் காரணம், அவர்களின்நேரடியானதுயரம் மட்டுமல்ல! சில ஆயிரம் பட்டதாரிகள், வேலையின்றிக் கிடப்பது பல கோடி மக்கள் பாதிவயிறுண்டும், சில கோடி மக்கள் பட்டினி கிடந்தும் சில இலட்சம் பேர்கள் பஞ்சத்தால் செத்தும் வரும் இந்தியாவிலே, காணப்படும் கோரக் காட்சியிலே முன்னணியில் உள்ளது அல்ல. ஆனால் இதனால் மறைமுகமான ஆபத்து இருக்கிறது. அதுதான் நமது மனதை வாட்டுவது.

(2-ம் பக்கம் பார்க்க)

# ✻ மிருதங்க புராணம்! ✻

கண்டுபிடித்து விட்டார்! அதியற்புதமான—அவசியமான—ஆராய்ச்சியொன்றில் வெற்றி பெற்றுவிட்டார்!

மிருதங்கம் — எப்படி உண்டாயிற்று, உங்களில் யாருக்காவது தெரியுமா, தெரியாவிட்டால் கேளுங்கள், அது எப்படி ஏற்பட்டது என்பதை அறிவிக்கும் ஓலைச்சுவடிகளைக் கண்டுபிடித்து விட்டார்!

கண்டுபிடித்தவர், ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்ட தோழர். இருப்பது சென்னை. அவர் கண்டுபிடித்து விட்டார், தேடித்தேடி அலைந்து முடிவில் மகா உண்மையை, மக்களுக்கு அவசியமான ஆராய்ச்சியொன்றைச் செய்து, அதில் வெற்றி பெற்றுவிட்டார்! மிருதங்கம், ஏற்பட்டது எப்படி, எப்போது என்பதற்கான விவரங்களைக் கூறும் ஓலைச்சுவடிகளைக் கண்டு பிடித்து விட்டார்!

* * *

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன், எப்போது என்று கூற முடியாது—கங்காநதி தீரத்தில், முனி சிரேஷ்டர்கள், தவம் செய்துகொண்டிருந்தனர். அவர்களின் அகோர தவத்தைக் கண்ட ஒரு ராக்ஷஸன்—பெயர் முராசூரன்—அவர்கள் தவத்தைக் கலைத்து, கொடுமை புரிந்து வந்தான். முராசூரனின் மூர்க்கத் தனங்களைக் கண்ட ரிஷிகள், 'எல்லாம் வல்ல' எம்பெருமான் மகாவிஷ்ணுவை நோக்கி, 'இடர் தீர்க்க வருவாய் இறைவா, அசுரன் அட்டகாசம் பொறுக்கவில்லை அரி பரந்தாமா' என்று முறையிட்டனர். பக்தர்களின் பரிதாபக் குரல் கேட்ட பரந்தாமன் வைகுண்டத்திலிருந்து விரைந்தோடி வந்தார் 'துஷ்ட நிக்ரக இஷ்ட பரிபாலனம்' செய்ய. பூலோகம் வந்ததும், முராசூரனுடன் போர்புரிந்து, அவன் தலைவேறு, கால்வேறாகத் துண்டித்தார். முண்டம் ஒரு பக்கமும், கால்கள் ஒருபக்கமும், தலை ஒருபக்கமும் கிடந்தது. உடனே விஷ்ணுவானவர், அசுரனுடைய தலையைச் சரிபாதியாகப் பிளந்தார்—தேங்காய் மூடி போல இரண்டாக்கினார்! அப்படி இரண்டாக்கப்பட்ட தலைகளை, காலும் தலையுமற்றுக் கிடந்த முண்டத்தில் ஒரு முனையில் ஒன்றையும் இன்னொரு பக்கத்தில் ஒன்றையும் வைத்துப் பொருத்தினார். உடனே, மிருதங்கம் உருவாயிற்று! மிருதங்கத்திலிருந்து சப்தம் எழும்ப, ஒரு பக்கத்தில் கரணை இருக்கவேண்டுமல்லவா? அதற்காகப் பரந்தாமன் அசுரனுடைய வயிற்றைக் கிழித்தார், அதில் அசுரன் சாப்பிட்டிருந்த சாதம் இருந்தது. அதையெடுத்து, கொஞ்சம் விளக்கெண்ணெய், சாம்பல் சேர்த்து, மிருதங்கத்தின் இடது பக்கத்தில் தடவி, தட்டினார். ஒலி எழும்பிற்று, செவிக்குணவாக!

* * *

தெரிந்து கொண்டீர்களா, மிருதங்கத்தின் வரலாற்றை, இதுதான் நமது ஆராய்ச்சித் தோழர் கண்டுபிடித்தது! மிருதங்கம் எப்படியேற்பட்டது என்பதுபற்றிய இந்தப் 'புராணம்', 125 ஆண்டுகளுக்கு முன், ஓலைச்சுவடிகளில், தெலுங்கு மொழியில் எழுதப்பட்டதாம்! இந்த 'அபூர்வ'மான சங்கதியை, ஆராய்ச்சித் துறையிலிருக்கும் தோழர் கண்டுபிடித்திருக்கிறார். இந்தப் பெருமைக்குரிய விஷயத்தைப் பூரிப்புடன் தருகிறார் "குளோப்" செய்தி ஸ்தாபனத்தார்!

அறிவியல் துறையி லீடுபட்ட, புது சங்கதிகளை, புதை பொருள்களைக் கண்டு, நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் உணர்த்தி மகிழவேண்டிய மாணவர், 'மிருதங்க புராணம்' தருகிறார். ஒலிக்கருவிகள் ஏற்பட்டது எப்போது, எப்படி யேற்பட்டன, எங்கு முதலில் செய்யப்பட்டது, எப்படி அவை மக்களிடையே பரவின என்ற உண்மைகளை, ஆராய்ச்சிக் கண்கொண்டு, ஆராய்ந்து, அதன் வரலாற்று உண்மையைக் கண்டுப் பிடிக்கும் பொறுப்பிலீடுபட்ட இளைஞர், மிருதங்க புராணத்தைக் கண்டு பிடிக்கிறார், அதை பிரபல்யப்படுத்துகின்றன "ஹிந்து" முதலிய பத்திரிகைகள்!

மேலைநாடுகளில் கிருமிகள் மூலம் ஒருநாட்டையே அழிக்கமுடியும், கண்மூடிக் கண் திறப்பதற்குள் 500 மைல் செல்லமுடியும், என்ற ஆராய்ச்சிகள் செய்யப்படுகின்றன. மனித வளர்ச்சி, அவர்கள் நாகரிக வளர்ச்சி பற்றி ஆதாரபூர்வங்களுடன் கண்டுபிடிப்புகள் செய்கின்றனர். ஆனால் நமது ஆராய்ச்சித் தோழரோ—பெயர் நாகேஸ்வரராவ்—தெலுங்கர்—மிருதங்க ஆராய்ச்சியிலிறங்கி மிருதங்கபுராணம் கண்டு பிடிக்கிறார்!

மனித உடலும், தலையும், உண்ட உணவும் மிருதங்கமாக்கப்படுகிறது. எப்படி ஆராய்ச்சி?

மிருதங்கம் உண்டான வரலாற்றைக் கண்டுபிடித்த இந்தப் புதுமையான ஆராய்ச்சியாளர், இன்னொரு முக்கியமான பகுதியை ஆராயாமல் விட்டுவிட்டார். அதாவது, முராசுரனைக் கொன்ற கண்ணன், (கடவுள்) அவனைக்கொன்றதோடு தம்முடைய வேலை முடிந்துவிட்டது — தவசிகளின் குறை தீர்ந்துவிட்டது—என்ற அளவோடு நின்றுவிடாமல், கொல்லப்பட்ட அசுரனுடைய தலையை எடுத்து இரண்டாகப் பிளந்ததாகவும், பின்னர் அவற்றை அந்த முண்டத்தின் இருபக்கத்திலும் வைத்துப் பொருத்தியதாகவும், உடனே அந்த அமைப்புவேலை ஒரு மிருதங்கத்தின் வடிவைப்பெற்றதாகவும், அந்த மிருதங்கத்திற்கு ஒலி உண்டாக்குவதற்காக, அந்த இறந்த உடலுக்குள் கிடந்த சோற்றை எடுத்துச் சிறிது சாம்பலும் சேர்த்துத் தடவியதாகவும், உடனே மிருதங்கம் அதன் வேலைக்குப் பக்குவப்பட்டு விட்டதாகவும் கூறப்படுகிறது.

முராசுரனைக் கொன்ற கடவுள், அவன் உடலையும் தலையையும் பார்த்த உடனே, அவை ஒரு மிருதங்க மாவதற்குரிய இலட்சணங்கள் பொருந்தியிருப்பதைக் கண்டுதான் மிருதங்கத்தை உண்டாக்கினார் என்பதனையும் இந்த ஆராய்ச்சியாளர் ஆராய்ந்து கூறாமல் ஏன் விட்டு விட்டாரோ தெரியவில்லை!

✻

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street, Kancheepuram.